# பொருளடக்கம்


1. என்னுரை 3
2. பெற்றோர்க்குப் பணிதல் 5
3. பெற்றோரின் சிறப்பு 7
4. பெற்றோரை நோவினைச் செய்தவனின் நிலை 15
5. பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள் 36
6. பிள்ளைக்ளின் சிறப்பு 38
7. தந்தையின் கடமை 40
8. கணவன் மனைவியர் கடமைகளும், உரிமைகளும் 44
9. கணவனின் கடமை 46
10. கணவனுக்கு மனைவி ஆற்றவேண்டிய கடமைகள் 51




# பெற்றோர்களுக்குப் பணிதல்!

அன்பர்களே!

இன்றைய சொற்பொழிவில் பெற்றோர்க்குப் பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும், அப்பெற்றோர்களிடம் எம்முறையில் பணிந்து நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் சிலவற்றைக் கூறுகின்றோம். கேட்டுச் செயல்படுங்கள்.

வல்ல அல்லாஹ் தன் அருள்மறையில் ''அல்லாஹ்வை வணங்குங்கள்; மேலும் அவனுக்கு எதையும் இணை வைக்காதீர்கள்; மேலும், பெற்றோர்க்கு நலம் புரியுங்கள்'' என்றும் கூறுகின்றான்.

அல்லாஹ் இத்திருவசனத்தின் மூலம் நமக்கு இரு கட்டளைகளை விதித்துள்ளான். ''ஒன்று, அவனை மட்டுமே வணங்கி வழிபட வேண்டுமென்றும், அவ்வணக்க வழிபாடுகளில் வேறு எவரையும், எதனையும் இணையாக்கக் கூடாதென்றும், இரண்டாவது, பெற்றெடுத்த தாய்க்கும் தந்தைக்கும் நலம் புரியவேண்டும்'' எனவும் கூறியுள்ளான்.

அவனது வணக்க வழிபாடுகளில் இணை வைத்தல் என்னும் செயல் மாபெரும் துரோகச் செயலும், மன்னிக்கப்பட முடியாத குற்றமும் ஆகும்.

அவனுக்கு இணைவைத்தலைப் பற்றி இறைமறை இவ்வாறு இயம்புகிறது:

''இன்னஷ்ஷிர்க்க லளுலுமுன் அளீம்'' - ''நிச்சயமாக இறைவனுக்கு இணைவைத்தல் மிகப்பெரும் அநியாயமாகும்' என்று!

அடுத்துப் பெற்றோருக்கு உதவி செய்யவேண்டிய காரணத்தைப் பற்றிக் கூறும்போது,

''மேலும், பெற்றோர்க்கு நலம் புரியுமாறு மனிதனுக்கு நாம் கற்பித்திருக்கின்றோம்; அவனுடைய அன்னை வருந்திச் சுமந்து (அவனை) வருந்திப் பெறுகிறாள், அவனை (அவள்) சுமத்தலும், பால் மறப்பித்தலும் முப்பது மாதங்களாகும்.''
—*(46:15)*

''எனக்கும் உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக என்று மானிடனுக்கு அவனுடைய பெற்றோரைப் பற்றி நாம் விதித்திருக்கின்றோம்; அவனுடைய அன்னை அவனை மூர்ச்சித்து மூர்ச்சித்துச் சுமக்கின்றாள்; அன்றியும், அவன் பால்குடி மறக்க ஈராண்டுகள் ஆகின்றன.'' —*(31:14)*

எனவே, இவ்விறை வசனங்கள் பெற்றோர்க்கு நாம் ஆற்றவேண்டிய கடமைகளுக்கான காரணங்களை விளக்கி வைக்கின்றன.

மேலும், இறைவன் கூறுகின்றான்: 'ரப்பிர்ஹம் ஹுமா-கமா ரப்பயானீ ஸகீரா''-''எங்களது இரட்சகா! அவ்விருவர் மாட்டும் நீ அருள்புரிவாயாக! எவ்வாறு அவர்கள் நான் சிறு குழந்தையாக இருக்கும்போது என்மீது இரக்கம் காட்டினார்களோ அவ்வாறு!''

அல்லாஹ் நமக்குக் கற்றுக் கொடுக்கின்றான் அவர்களுக்காக துஆக் கேட்கும் முறையை! மேலும்,



''அவ்விருவருள் ஒருவரோ, இருவரோ, அல்லது இருவருமோ முதுமைப் பருவம் அடைந்தவர்களாய் உம்மிடத்தில் இருந்தால் நீர் அவ்விருவரையம் (நோக்கி) சீ என (இகழ்ச்சியான சொல்லை) கூறுவதோ, அவ்விருவரையும் வெருட்டவோ கூடாது. அவ்விருவரிடமும் கண்ணிய மொழியாக உரையாடக் கடவீர்'' எனவும் நமக்குக் கூறுகின்றான்.

அன்பர்களே! இறைமொழியும், இறைத் தூதரின் இன்மொழிகளும் பெற்றோரின் சிறப்பினைப் பற்றி நிரம்ப எடுத்துரைக்கின்றன. அவற்றை வரிசையாகக் கூறிக் கொண்டே போகலாம்; என்றாலும் நாம் இங்கு ஒரு சிலவற்றையே கூறிட விழைகின்றோம்.

ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம், ''அல்லாஹ்வின் தூதரே! பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் ஆற்றவேண்டிய கடமைகள் யாவை?'' என்று வினவினார். அது சமயம் நபி (ஸல்) அவர்கள், ''அவர்கள் உமக்குச் சுவர்க்கமும், நரகமும் ஆவர்'' என விடையளித்தார்கள்.

இதற்கு விளக்கம் வேறு வேண்டுமா? சுருக்கமாகச் சொல்லிவிட்டார்களே, அவர்களுக்கு நன்றி செலுத்தி வழிப்பட்டு நடந்தால் சுவர்க்கம்; நன்றி கொன்று மாறு செய்தால் நரகம் அவ்வளவுதான்.

# பெற்றோரின் சிறப்பு!

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''ஒருவன் தன் பெற்றோரின் மண்ணறையை ஜியாரத்துச் செய்வானாயின், அவன்

எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் அல்லாஹ் நூறு நன்மைகளை அவனுக்கு எழுதுகின்றான். பெற்றோரிடம் நன்றியுடன் நடந்து அவர்களை அன்புடன் நோக்குவானாயின், அவனுக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு ஹஜ்ஜுடைய நன்மையை அல்லாஹ் வழங்குகின்றான்.''

இன்னும் கேளுங்கள்:-

''அல்லாஹ்வின் தூதரே! நான் நல்லுறவு கொண்டாட மிகவும் உரிமையுடையவர்கள் யாவர்?'' என்று ஒருவர் வினவினார்; 'உமது அன்னை' என்றனர். 'பின்னர் யாவர்?' என்றார்; 'உமது அன்னை' என்றனர். 'பின்னர் யாவர்?'' என்றார்; 'உமது அன்னை' என்றனர். 'பின்னர் யாவர்?' என்றார். 'உமது தந்தை' என்றனர்.

என்ன கேட்டீர்களா? அன்னையின் மாண்பு எத்தகையது என்று அறிந்து கொண்டீர்களா?

இதோ! அன்னையின் சிறப்பினை விளக்கிடும் நிகழ்ச்சியினைக் காண்போம் வாருங்கள்!

இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) அவர்கள் ஒருமுறை கஃபாவைத் தவாப் செய்து கொண்டிருந்தார்கள்; அது சமயம் ஒரு மனிதன் ஒரு பெரிய பெட்டியைத் தன் தோளின் மீது சுமந்தவனாகத் தவாப் செய்து கொண்டிருந்தான். அம்மனிதனை விளித்து, ''நீ ஒழுக்கக் குறைவாக இவ்வளவு பெரிய பெட்டியைச் சுமந்து கொண்டு தவாப் செய்கின்றாயே ஏன்?'' எனக் கேட்டார்கள். அது பொழுது அம்மனிதன், ''பெரியார் அவர்களே! நான் ஒழுக்கக் குறைவுடன் எதனையும் செய்யவில்லை; இப்பெட்டியில் வயது முதிர்ச்சியால் தளர்ந்து போன என் அன்னை இருக்கின்றார்கள்; அவர்களால் தவாப் செய்ய



இயலாது; அவர்களுக்குப் பகரமாக அக்கடமையை ஆற்றுவதன் மூலம் நான் என் அன்னைக்குச் செய்ய வேண்டிய பணிவிடையையும், அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமையையும் நான் நிறைவேற்றுவதன் மூலம், அவர்களுக்கு நன்றி செலுத்தியவனாகவும் ஆவேன் அல்லவா?'' எனக் கூறினான்.

அவன் கூறியதைக் கேட்ட இமாம் அவர்கள் ''நீ கிழக்கிலிருந்து மேற்குவரை எழுபது முறை உன் அன்னையைச் சுமந்து திரிந்துப் பணிவிடைச் செய்தபோதிலும், நீ உன் அன்னையின் வயிற்றில் புரண்டிட்டபோது அவளுக்கு வேதனை ஏற்பட்டிருக்குமே, அதற்கு நிகராக நீ செய்திடும் இப்பணிவிடைகள் ஈடாகாது' என்றார்கள்.

மேலும், அல்லாஹ் ஹதீஸ் குத்ஸியில் கூறுகின்றான்:

''மன்ரலிய அன்ஹு வாலிதஹு ஃபஅன அன்ஹுராலின்.''

''எவனது பெற்றோர்கள் ஒருவனைப் பொருந்திக் கொள்கின்றனரோ, அவனை நான் பொருந்திக் கொள்வேன்.'' மேலும் தாயின் சிறப்பினை விளக்கிடும் நிகழ்ச்சிகள் பற்றிக் கூறுவோம்.

பிலாலுல் கவ்வாஸ் (ரஹ்) என்னும் பெரியார் கூறுகின்றார்கள்: நான் பனீ இஸ்ராயீலர்களுடன் காட்டில் இருந்து வந்தேன். அது பொழுது ஓர் இடத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது என்னைத் தொடர்ந்து ஒருவர் வந்து கொண்டிருந்தார். நான் வியப்புற்று அவரிடம் ''அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கேட்கின்றேன். தாங்கள் யார்?'' என்று வினவினேன். அதற்கவர், ''நான் உம்முடைய உடன்பிறப்பு கிலுறு ஆவேன்'' என்றார்கள். நான் அவர்களிடத்தில், ''தங்களிடம் ஒரு செய்தி

யைப் பற்றிக் கேட்கலாமா?'' என்றேன். அவர்கள் ''கேளும்'' என்றார்கள்.

நான், ''இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களைப் பற்றித் தங்கள் கருத்து யாது?'' என்று கேட்டேன்.

''இமாம் ஷாபியீ (ரஹ்) அவ்தாதுகளில் உள்ளவர் ஆவர்'' என்று கிலுறு நபி (அலை) கூறினார்கள்.

''சரி; இமாம் அஹ்மதுப்னு ஹம்பல் (ரஹ்) அவர்களைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?'' என வினவினேன். அதற்கவர்கள்,

''அஹ்மதுப்னு ஹம்பல் (ரஹ்) அவர்கள் 'சித்திக்' ஆவர்!'' என விடையளித்தார்கள்.

''சரி; பிஷ்ருப்னுல் ஹர்ஸ் (ரஹ்) அவர்களைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்'' என்று கேட்டபோது,

''அவர்களுக்குப்பின் அவர்களைப் போன்று ஒருவருமில்லை' என்றார்கள்:

'நான் தங்களை எவ்வாறு காணமுடிந்தது?'' எனக் கேட்டேன்.

''நீர் உம்முடைய அன்னையிடம் நன்றியுடையவராயும், நலம் செய்பவராயும் இருப்பதனால் என்னை அறிந்து கொண்டீர்!'' எனக் கூறினார்கள்.

ஆம்! நபி கிலுறு (அலை) அவர்களைக் காணுகின்ற பேறு (பாக்கியம்) எல்லோருக்கும் கிடைத்து விடுவதில்லை, ஒரு சில நல்லடியார்களுக்கே கிடைக்கப் பெறும்.

என்னுடைய ஆசானும், என்பால் பேரன்பு கொண்டிருந்தவர்களுமான என் கண்ணியத்திற்குரிய கிளியனூர் அப்துல்



ஹமீது ஹஸ்ரத் கிப்லா அவர்கள் நபி கிலுறு (அலை) அவர்களைக் கண்டு மூன்று முறை உரையாடி மகிழ்ந்துள்ளனர். அப்பெருந்தகையார் தாம் எனக்கு நீந்துவதற்குக் கற்றுக் கொடுத்தவர்கள். நான் நீடூரில் கல்வி பயின்ற காலத்தில் என்மீது பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள். அவர்கள் கல்விக்கடல்; அப்பெருந்தகைச் சில மாதங்களுக்கு முன்னர் தாம் இவ்வுலகை விட்டும் பிரிந்தார்கள். அல்லாஹ் அப்பெருந்தகைக்கு சுவனத்தில் உயர் பதவியை அளிப்பானாக!

எனவே அன்பர்களே! தாய் தந்தையர்களுக்கு சேவை செய்து நன்றியுடன் நடந்து கொள்பவர்களுக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து எல்லாப் பேறுகளும் கிடைக்கப் பெறுகின்றன. இதோ கேளுங்கள்! பெற்ற தாய்க்குப் பணிவிடைச் செய்ததன் காரணமாக, நபி மூசா (அலை) அவர்களுக்கு சுவனத்துக் கூட்டாளியாக இருந்திடும் பேற்றினைப் பெற்ற ஒருவரின் வாழ்க்கையை!

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

''பெற்றோரின் பொருத்தை (திருப்தி)யில் இறைவனின் திருப்பொருத்தமும், பெற்றோரின் சினத்தில் இறைவனின் சினமும் உள்ளது.'' — திர்மிதி.

மேலும் கூறினார்கள்: ''தாயின் காலடியில் சுவர்க்கமிருக்கின்றது'' என்பதாக!

மேலும் கூறினார்கள்:-

''மூன்று குணங்கள் ஒருவனுக்கிருந்தால் அல்லாஹ் அவனுடைய மரண வேதனையை எளிதாக்கி, அவனைத் தன் சுவர்க்கத்தில் புகுத்துவான். (அவையாவன):

''பலவீனர்களிடம் நயந்து நடத்தலும், பெற்றோர்க்காகச் செலவிடுதலும், அடிமைக்கு நலம் புரிதலுமாகும்.''

அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி); திர்மிதீ.

# மூசா நபி (அலை) அவர்களின் சுவர்க்கத்து நண்பர்!

வல்லோன் அல்லாஹ்விடம் நபி மூசா (அலை) அவர்கள், ''இறைவா! என்னுடன் சுவர்க்கத்தில் இருந்திடும் பேற்றினைப் பெற்ற எனது சுவர்க்கத்து நண்பர் யார்?'' என வினவியபோது, ''மூசாவே! இன்ன ஊருக்குச் செல்வீராக! அங்கு ஒரு கறிகடைக் காரர் இருக்கின்றார்; அவர் தாம் உமது சுவர்க்கத்துநண்பர்'' என அல்லாஹ் விடையளித்தான். இறைவனின் ஆணை ஏற்று நபி மூசா (அலை) அவர்கள் அவ்வூரை நோக்கி விரைந்தார்கள். அவ்வூரை அடைந்து, அக்கறிகடைக்காரரை அடையாளம் கண்டு கொண்டார்கள். கடைக்காரர் கறி விற்பனைச் செய்து கொண்டிருந்தார். நபி அவர்கள் ஓர் ஒதுக்குப்புறமாக நின்று கொண்டு அவரின் நடவடிக்கைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து வந்தார்கள். மாலை மங்கியபொழுது அவர் இறைச்சியை எடுத்து வைத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட ஆயத்தமானார். அது சமயம் நபி அவர்கள் அவரிடம் சென்று ''நண்பரே! நான் ஒரு வழிப்போக்கன். இருட்டிவிட்டது. எனவே, இன்றிரவு உம்முடன் விருந்துண்ண வரலாமா'' என வினவினார்கள்.



''சரி; வாருங்கள்!'' என்று கடைக்காரர் கூறித் தம் இல்லம் அழைத்துச் சென்றார். பின்னர், தாம் கொண்டு வந்த கறியை அவரே பக்குவமாக சமைத்தார். அதன் பின் வீட்டின் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த கூடு ஒன்றை எடுத்துவந்தார். அக்கூட்டில் நலிந்து, மெலிந்து போன கூனிக் குறுகிய நிலையில் இருந்த ஒரு வயது முதிர்ந்த மூதாட்டியை வெளியில் தூக்கினார். பின்னர் உணவை எடுத்து அம்மூதாட்டிக்கு ஊட்டினார். அம்மூதாட்டியின் அழுக்குப் படிந்த ஆடைகளைக் களைந்து அவரே அவற்றைத் துவைத்தார். இவையனைத்தையும் இமை கொட்டாது வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த மூசா (அலை) அவர்கள், அக்கிழத்தாயின் வாய் எதையோ முனங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். நபி அவர்கள் அருகில் சென்று காது கொடுத்துக் கேட்டார்கள்.

அதுசமயம், ''அல்லாஹும்மஜ்அல் இப்னீ ஜலீஸ மூஸா ஃபில்ஜன்னா.''

—''எனது இறைவா! என் மகனை நபி மூசா (அலை) அவர்களுடன் சுவனத்தில் இருக்கச் செய்வாயாக!'' என்று அம்மூதாட்டியின் வாய் முணுமுணுத்தது. அம்மொழி கேட்டு வியப்புற்ற நபி அவர்கள், கறி கடைக்காரரைப் பார்த்து, ''நண்பரே! இந்த அளவிற்குப் பணிவிடைகள் செய்கின்றீரே, இந்த அம்மையார் யார்?'' எனக் கேட்டார்கள்.

''இவர்கள் என்னை ஈன்ற தாய்'' என்றார். மூசா நபி (அலை) அவர்கள், ''உமக்கு நன்மாராயம் உண்டாகுக! நான் தான் இறைவனின் தூதர் மூசா ஆவேன்; நீரே எம்முடன் சுவனத்தில் இருந்திடும் பேறு பெற்றவர் ஆவீர்; உம் அன்னையின் இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொண்டுவிட்டான். எனவேதான் அல்லாஹ்வே உம்மை எமக்கு அறிவித்துக்

கொடுத்தான்'' என்றார்கள். நபியின் மொழியினைக் கேட்ட அவர் மகிழ்ச்சியடைந்தார். தமக்குக் கிடைத்திட்ட இந்நற்பேறு அன்னைக்குத் தாம் ஆற்றிய பணிவிடையால்தான் என்பதனையும் உணர்ந்து கொண்டார். இப்பேற்றினை அளித்த வல்ல அல்லாஹ்விற்கு நன்றி கூறினார். தமக்காக நாள்தோறும் இறைஞ்சிடும் அன்னையைப் புகழ்ந்தார்.

என்ன கேட்டீர்களா? அன்னையின் மாண்பு எத்தகையது என்பதனை? இதோ கேளுங்கள்!

மு-ஆவியா இப்னு ஜாஹிமா (ரலி) எனும் நபித்தோழர் அறிவிக்கின்றார்கள்: ''அல்லாஹ்வின் தூதரே! நான் போர் புரியக் கருதுகின்றேன்; தங்களிடம் ஆலோசிக்க வந்தேன்'' என்று கூறினார். அப்பொழுது, ''உமக்கு தாயார் இருக்கின்றாரா?'' என்று நபி (ஸல்) வினவினர். அவர், ''ஆம்'' என்றார். ''அப்படியானால் அவர் அருகே இருந்திடுவீராக! ஏனெனில் அவர் காலடியிலேயே சுவர்க்கம் உள்ளது'' என நபி (ஸல்) கூறினார்கள். —அஹ்மது, நஸயீ, பைஹகி.

அன்பர்களே!

இறைவழியில் போரிடுவதும், அதன்மூலம் இறப்பெய்துவதும் எத்துணை மாண்பிற்குரியது என்பதனை அருள்மறை குர்ஆனும், அண்ணல் நபியின் அருள்மொழிகளும் வியந்துரைக்கின்றன; சிறப்பித்துக் கூறுகின்றன. என்றாலும் பெற்ற தாய்க்குப் பணிவிடைச் செய்வதை எந்த அளவிற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் உயர்வாகவும், சிறப்பிற்குரியதாகவும் போற்றிக் கூறியுள்ளார்கள் என்பதை இந்த நபிமொழியின் மூலம் நாம் அறிந்து கொள்கின்றோம்.

நாம் அறிந்தவரை, படித்தவரை, கேட்டவரை நபி (ஸல்) அவர்களைத் தவிர, வேறு எவரும், எந்த அறநூலும், எந்த மதமும் உலகில் இத்துணையளவிற்குப் பெண்ணினத்திற்கு



மதிப்பினை, மரியாதையினை, சிறப்பினை அளித்ததாக அறிய வரவில்லை.

எனவே நாம் அனைவரும் தாய் தந்தையர்க்குப் பணிவிடைச் செய்து, அவர்களின் அன்பையும், பொருத்தத்தையும் பெற்று, அல்லாஹ்வின் அன்பிற்கும், திருப்பொருத்தத்திற்கும் உரியவர்களாக ஆவோமாக! அல்லாஹ் அதற்கு நல்லுதவி புரிவானாக! ஆமீன்!

## பெற்றோரை நோவினை செய்தவனுடைய நிலை!

இறையன்பர்களே! சென்ற சொற்பொழிவில் பெற்றோருக்குப் பணிவிடைச் செய்தவன் பயன்கள் குறித்துக் கூறினோம். அவர்களை நோவினைச் செய்தால் விளைந்திடும் தீங்குகள் பற்றிக் கூறுகின்றோம், கேட்டுக் கொள்ளுங்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''அவனுடைய மூக்கு மண்ணைக் கவ்வக் கடவது! அவனுடைய மூக்கு மண்ணைக் கவ்வக் கடவது!! அவனுடைய மூக்கு மண்ணைக் கவ்வக் கடவது!!! (அவன் இழிவுக்கு ஆளாவானாக!)'' என்று அல்லாஹ்வின் தூதர் கூறினார். ''அல்லாஹ்வின் தூதரே! எவன்?'' என்று கேட்கப்பட்டது. ''எவன் தனது பெற்றோர் இருவருக்குள் ஒருவரையோ அல்லது இருவரையுமோ முதுமைப் பருவத்தினராய்க் கண்டும் சுவர்க்கம் புகவில்லையோ, அவன்'' என்று நபி(ஸல்) விடையிறுத்தார்கள். (முஸ்லிம்)

அன்பர்களே! இந்த ஹதீஸின் கருத்தென்னவென்றால், முதுமைப் பருவத்தை ஏற்றிவிட்ட பெற்றோரைக் கவனிக்கா

மல், அவர்களுடன் நல்லுறவு கொள்ளாமல், அவர்கள் மனம் புண்படும்படி நடந்து கொண்டதன் காரணமாகப் பெற்றோரின் 'பத்துஆ'விற்கு ஆளான பிள்ளைகள் இறைவனின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாகிவிடுவார்களாயின் அவர்கள் சுவர்க்கத்தை அடைவது எளிதான செயலல்ல என்பதாகும்.

சரி; வாருங்கள்; மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- பெற்றோரின் சொல்லைத் தட்டி நடப்பவன் அல்லாஹ்வை விட்டும், வானவர்கள், சுவர்க்கம் நல்லோர்கள் அனைவரையும் விட்டும் தொலைவானவன்; ஆனால், நரகத்திற்கு மிக நெருக்கமானவன்.''

மேலும் கூறினார்கள்:- ''எவன் தாய் தந்தையரை அடிப்பதற்காக கையை ஓங்குவானோ, அவனின் கையைக் கழுத்துடன் கட்டப்பட்டுப் பழுதாக்கப்படும்'' எனக் கூறியபோது, தோழர்கள் கேட்டார்கள்: ''அவர்களை அடித்தவனுக்கு என்ன தண்டனை வழங்கப்படும்?'' என்று! ஸிராத்துல் முஸ்த்தகீம் என்னும் பாலத்தைக் கடக்குமுன் அவனுடைய கை வெட்டப்பட்டு விழும்; வானவர்கள் அவனை அடிப்பார்கள்'' எனக் கூறினார்கள்.

''எவன் பெற்றோரை ஏசுவானோ கப்றில் அவனது விலாப்புறத்தில் மழைத் துளிகளைப் போன்று, நெருப்புக் கங்குகள் பறக்கும்'' என நபி (ஸல்) கூறினார்கள்.

அல்லாஹ் நபி மூசா (அலை) அவர்களுக்கு 'வஹீ' அறிவித்தான். ''மூசாவே! எவன் தாய் தந்தையர்க்கு நன்றி செலுத்துவானோ அவனுக்கு சொர்க்கமேயன்றி வேறில்லை.

''மேலும், எவனொருவன் பெற்றோரின் மனதை நோகச் செய்வானோ அவனுக்கு என்னிடம் நரகத்தையன்றி வேறொன்றுமில்லை.''



இதோ கேளுங்கள். அஹ்மதுத்துஜ்ஜார் என்பவர் கூறுகின்றார்: ''எனக்கோர் உடன்பிறந்தார் இருந்தார். அவரின் இறப்பிற்கு பின்னர் நான் அவரைக் கனவில் கண்டு என் சகோதரா! அல்லாஹ் உம்மிடத்தில் எவ்வாறு நடந்து கொண்டான்? எனக் கேட்டேன். அவர்,

''என் பெற்றோரின் பொருத்தமின்மையும், என்பால், மகிழ்வற்ற தன்மையும் என்னை சுவனத்தின் வாடையைக் கூட முகர்ந்திட முடியாமல் செய்துவிட்டன. எனினும், என் தவறுகளுக்குப் பெற்றோரின் மன்னிப்பையும், அவர்களின் பொருத்தத்தையும் தேடி பெற்றோரின் காலடிகளை எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றேன்'' என்று கூறினார்.

இதோ! இன்னுமொரு நிகழ்ச்சியைக் கேளுங்கள்:- அல்கமா (ரலி) என்னும் நபித்தோழர் இருந்தார்கள். அவர்கள் இறை வணக்கங்களிலும், கொடைத் தன்மையிலும் சிறந்து விளங்கினார்கள். அத்தோழர் நோய் வாய்ப்பட்டு இறப்புப் படுக்கையில் இருந்தார்கள். அது பொழுது தம் நிலை விளக்கித் தம் மனைவியை நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அந்தப் பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதரே! என் கணவர் அல்கமா சக்ராத்தில் இருக்கின்றார்'' என்றார். உடனே, நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் அல்கமா அவர்களின் இல்லம் ஏகினார்கள். அவரின் அருகில் அமர்ந்து, ''அல்கமாவே! உம்முடைய நிலை யாது?'' எனக் கேட்டார்கள். அல்கமா (ரலி) ஏதும் கூறவில்லை. அவர்களுக்குக் கலிமா சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களின் நாவு கலிமா மொழியவில்லை; பல முறைச் சொல்லிக் கொடுத்தும் அல்கமா (ரலி) கலிமா மொழிய முடியாமல் திணறினார்கள். பின்னர், அவரின் தாயாரை அழைத்து வருமாறு கூறினார்கள்.

அல்கமாவின் அன்னையார் வந்ததும் அவரிடம் நபி (ஸல்) அவர்கள்,

''அல்கமாவின் அன்னையே! உம்முடைய மகன் என்ன அமல்கள் செய்து வந்தார்?'' எனக் கேட்டார்கள். ''என் மகன் தொழுவார்; நோன்பு வைப்பார்; கொடை வழங்குவார்; நன்மையான செயல்களை செய்வதில் எப்பொழுதும் தீவிர மாக இருப்பார்; எனினும், என்னைவிடத் தம் மனைவியை உயர்வாகக் கருதினார்; என்னைப் புறக்கணித்தார்; என் மனம் நோகச் செய்தார்''எனக் கூறினார்.

அவரின் மொழி கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''உம்முடைய மகன் செய்த பிழைகளை மன்னித்து விடுங்கள்; அவர் மரண வேதனையில் கலிமா மொழிய முடியாத நிலையி லுள்ளார்'' என்றார்கள். அந்த அம்மையார் மன்னிக்க முடியாது என்று கூறிவிட்டார். நபி (ஸல்) அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அந்தத் தாய் மன்னிக்க மறுத்துவிடவே, நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களை விளித்து, ''நீங்கள் சென்று விறகுகளைக் கொண்டு வந்து குவித்து, அதில் நெருப்பு மூட்டி, எரியும் நெருப்பில் அல்கமாவைத் தூக்கிப் போடுங் கள்; அவர் அதிலேயே கரிந்து போகட்டும்'' என்றார்கள்.

அண்ணலாரின் கூற்றினை கேட்ட அக்கிழத்தாய், ''வேண் டாம்; வேண்டாம். என் ஈரல்குலைத் துண்டை நெருப்புக் கரிப்பதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது'' என்றார். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள்,

''உம்முடைய வயிற்றில் பிறந்த ஒரு காரணத்திற்காக உம்முடைய மகனை இந்த உலக நெருப்பில் போடுவதைக் காண உம்மால் பொறுக்க முடியவில்லையே? நாளை நரக நெருப்பில் அவரைப் போடுவதை என்னால் எவ்வாறு பொறுத்



துக் கொள்ள முடியும்? நீர் எதுவரையிலும் உம்முடைய மகனின் குற்றங்களை மன்னித்து, அவரின் மீது மகிழ்வு கொள்ளமாட்டீரோ, பொருந்திக் கொள்ள மாட்டீரோ அது வரை அல்லாஹ்வும் அவரின் தொழுகை, நோன்பு, நற்செயல் ஆகியவற்றையும் ஏற்றுக் கொள்ள மாட்டான். அவரையும் பொருந்திக் கொள்ள மாட்டான்'' எனக் கூறினார்கள்.

உடனே அத்தாய் ''நான் என் மகனின் பிழைகளை அல்லாஹ்விற்காக மன்னித்துவிட்டேன்; அவரை நான் பொருந்திக் கொண்டேன்.'' என்றார். உடனே, நபி (ஸல்) அவர்கள், அல்கமா (ரலி) அவர்கட்கு கலிமா சொல்லிக் கொடுத்தார்கள். அல்கமாவும் கலிமாவை மொழிந்தார்கள். உயிரும் பிரிந்தது. பின்னர் அல்கமாவைக் குளிப்பாட்டி தொழ வைத்து அடக்கினார்கள். அல்கமா (ரலி) அவர்களின் அடக்க விடத்தில் நின்றவாறு;

''முஹாஜிரீன்களே! அன்சாரிகளே! உங்கள் மனைவியரின் பேச்சைக் கேட்டு, உங்கள் பெற்றோரின் மனத்தைப் புண்படுத் தாதீர்கள். அவ்வாறு செய்பவர்களை அல்லாஹ்வும் விண்ணவ ரும் சபிக்கின்றனர். அவர்களின் ஃபர்ளான, நபிலான நற்செயல் களையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான்'' என்கிறார்கள்.

என்ன கேட்டீர்களா? அண்ணல் நபியின் தோழருக்கே இந்நிலையென்றால், உங்களுக்கும், எனக்கும் எந்நிலை ஏற்ப டும்?

இன்றைக்கு நம்முடைய புதிய இரத்தங்கள் திருமணம் ஆனதுமே தலை மாட்டு மந்திரத்தைக் கேட்டுத் தாய் தந்தைய ரைப் படுத்தும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல; உடனே தனிக்குடித்த னம். இல்லையென்றால் பெற்றோர்க்கு அடி, உதை! என்ன

காரணம் அவர்கள் மார்க்க ஒழுக்கத்துடன் வளர்க்கப்படாமை யேயாகும்.

நம்மிடத்திலேயே மார்க்க ஒழுக்கமில்லையே நாம் எப் படி அவர்களுக்குப் போதிக்கமுடியும்?

எனவே, அன்பர்களே! பெற்றோரின் மனம் குளிர்ந்திடும் வண்ணம் நம்முடைய செயல்கள் அமைந்திட வேண்டும். அவர்களின் துஆவை நாம் எப்பொழுதும் எதிர்பார்த்த வண்ண மிருக்க வேண்டும். ஏனென்றால்,

''ஒரு தாய் தம் பிள்ளைகளுக்காகக் கேட்கும் துஆ, நபிமார்கள் தம் சமுதாயத்தவர்களுக்காகக் கேட்டிடும் துஆ வைப் போன்றது'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பெற்றோர்கள் பாவமான செயல்களையோ, மார்க்கத் திற்கு முரணான செயல்களையோ செய்யச் சொன்னால் நாம் அதற்குக் கட்டுப்பட வேண்டியதில்லை; அத்தவறுகளை இத மாக அவர்கட்கு உணர்த்த வேண்டும்.

மேலும் கேளுங்கள்:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''எவன் இவ்வுலகத் தில் தன் தாய் தந்தையின் தேவைகளை நிறைவேற்றி வைப் பானோ, அல்லாஹ் அவனின் பாவங்களை மன்னித்து, அம்மக னின் இவ்வுலக, மறுவுலக தேவைகளில் எழுபது தேவைகளை நிறைவேற்றித் தருகின்றான்.

''மறுமையின் தேவைகளில் முதன்மையானது சுவர்க்கம் நுழைவது; இரண்டாவது, அல்லாஹ்வின் திருக்காட்சியைக் காண்பதாகும்.''

மேலும் கூறினார்கள்: ''ஒருவன் தன் வீட்டில் தின்பண்டங் கள் வைத்திருந்து, அவற்றைத் தாய் தந்தையர்களுக்குக் கொடுக்



காமல் தின்பானாயின், அவனுக்கு சுவர்க்கத்துடைய இனிய பண்டங்களை அல்லாஹ் ஹராமாக்கி விடுவான்.''

மேலும், ஒரு பெரியாரிடம் மக்கள் சென்று, ''என்ன காரணத்தால், எங்களுடைய மனங்கள் கல்லாகி, பாவங்கள் அதிகமாகியும், அல்லாஹ்வின் அளவில் தவ்பா- பாவமீட்சியும் தேடாமல் இருக்கின்றோம்?'' என்று கேட்டனர்.

அப்பெரியார், ''நீங்கள் மறுமையை விட்டும் நட்டம் (நஷ்டம்) ஆகும் அமல்களையே செய்து வந்தீர்கள். பெற்றோ ருக்கு மாறு செய்தீர்கள்; நற்செயல்களை விட்டு விட்டீர்கள். நீண்ட மேலெண்ணம் கொண்டிருந்தீர்கள்; அநீதம் என்று தெரிந்தும் அமானிதப் பொருள்களைப் பாழாக்கினீர்கள்.

உங்கள் வயது அதிகமாக அதிகமாக நயவஞ்சக எண்ணத்தை அதிகமாக்கிக் கொண்டிருந்தீர்கள்; ஐவேளைத் தொழுகைகளையும் வீணாக்கினீர்கள். ஜகாத் கொடாதிருந்தீர்கள்; கோள் சொல்லித் திரிந்தீர்கள்; அனாதைகளை துன்புறுத்தினீர்கள்; மார்க்கக் கட்டளைகளைப் புறக்கணித்தீர்கள்.

அல்லாஹ்விற்கு விருப்பமற்றதையும் ஷைத்தானுக்கு மகிழ்ச்சியளிக்கும் செயல்களையும் செய்தீர்கள். வட்டி வருமா னத்தில் உண்பதிலும், பெண்களிடம் தீய நடத்தைக் கொள்வ தையும், தீயவர்களுடன் நட்பு கொள்வதையும், பொய்சாட்சிக் கூறுவதையும், செல்வர்களாகிய பணக்காரர்களிடம் பணிந் தும், ஏழைகளை இழிவாகவும் கருதினீர்கள், பெருமையடித்து வாழ்ந்தீர்கள்.

எனவே இத்தகைய செயல்களால் உங்கள் நப்ஸு- மனங்கள் வன்னெஞ்சம் கொண்டு விட்டன. அதன் காரணமாக பாவங்கள் அதிகரித்து விட்டன. உங்களைத் தவறுகளிலிருந்து

விலக்குபவர்களில்லை. நன்மையை எடுத்துக் கூறுபவர்களும் இல்லாமற் போய்விட்டனர்.

அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களுமில்லை. உங்கள் தீய பேச்சுக்கள் உங்களுக்கு இன்மளிப்பதாகவும், செயல்கள் தீங்களிப்பனவாகவும், நாவுகள் கெட்டதாகவும் இருப்பதுடன், பிறரின் குறைகளைத் துருவி ஆராய்பவர்களாகவும் இருக்கின் றீர்கள்.

இத்தகைய செயல்களைச் செய்வதன் மூலம் அல் லாஹ்வை வெட்கப்படாமலும், அவனின் போற்றலுக்குரிய வர்களாகவும் இல்லாமலிருக்கின்றீர்கள். நீங்கள் விரட்டப்பட் டவர்களாயிருக்கின்றீர்கள். அதன் காரணங்களால் தான் நீங்கள் அல்லாஹ்விடம் பாவ மீட்சித் தேட முடியாமல் ஆக்கிவிட்டீர் கள்; அல்லாஹ் உங்களுக்கு நல்லுதவி புரிவானாக!'' என அப்பெரியார் கூறினார்.

மேலும் கேளுங்கள்; நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- நரகத்தில் இப்லீசுக்கும், 'ஆக்குல்வாலிதைன்' அதாவது பெற் றோரை நோவினைச் செய்தவனுக்கும் இடையில் ஒரு படித்தர வேறுபாடுதான் இருக்கும். நரகத்தில் ஷைத்தானுக்கு அடுத்து பெற்றோரின் மனம் நோகச் செய்தவன் இருப்பான்.

மேலும், சுவர்க்கத்தில் 'முஹ்ஸினுல் வாலிதைன்' அதா வது, பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்தியவன் நபிமார்களுக்கு அடுத்து இருப்பான்.

ஆக, பெரியோர்களே! பெற்றோரை நோவினைச் செய்தவ னின் நிலை நரகத்தில் எவ்வாறிருக்கும் என்பதனையும், அவர் களை மகிழ்வித்தவனின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை யும் அறிந்து கொண்டீர்கள்.



மேலும், கேளுங்கள், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''நான் மிஃராஜின்போது ஒரு கூட்டத்தார் நெருப்பால் ஆன தூக்கு மரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அக் கூட்டத்தாரைப் பற்றி ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் கேட் டேன்.

என்னுடைய சகோதரரே! இக்கூட்டத்தார் எவர்கள்? என்ன பாவம் செய்தார்கள்!'' என்று. அப்பொழுது ஜிப்ரயீல் (அலை) அவர்கள்,

''இவர்கள் தங்கள் தாய் தந்தையரை ஏசிப் பேசி நோவி னைச் செய்தவர்கள்'' எனக் கூறினார்கள்.

மாலிக் என்னும் நரகத்தின் காவலாளி, ''இவர்களை நெருப்பின் தூக்கு மரத்தில் தூக்கில் போட்டு அவர்களின் நாவுகளை நெருப்பால் ஆன குறடுகளால் பிடித்திழுத்து, கழுதையைப் போல் நாடியின் கீழ்ப்புறமாக வெளியாக்கும்படி அல்லாஹ் எனக்கு ஆணையிட்டுள்ளான்.'' எனக் கூறினார்.

நபி(ஸல்) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: பெற் றோரை நோவினைச் செய்தவர்களுக்குக் கொடுக்கப்படும் வேதனையைக் கண்டு, நான் கவலையிலும், வேதனையிலும் மூழ்கியது போன்று வேறு எவையும் என்னைக் கவலை கொள்ளச் செய்யவில்லை.

நான் சுவர்க்கத்தில் இருக்கும்போது, பெற்றோரின் வெறுப்பிற்கு ஆளானவர்கள் நரகத்தில் அனுபவிக்கும் தண்ட னையின் காரணமாக அவர்கள் எழுப்பும் பயங்கரமான கூக்குர லையும், வேதனையால் துடித்து அழும் ஓசைகளையும் கேட் டுப் பொறுக்க முடியாத நிலையில் நான் அல்லாஹ்வின் அர்ஷிற்குக் கீழ் சென்று, மன்றாட எண்ணி சஜ்தாவில் விழு வேன். அப்போது அல்லாஹு தஆலா,

''என்னுடைய அன்பரே! தலையை உயர்த்தும்! எதுவரை அவர்களின் பெற்றோர்கள் அவர்களைப் பொருத்திக் கொள்ள மாட்டார்களோ, அதுவரை நான் அவர்களின் பிழைகளை மன்னிக்கமாட்டேன்; எனவே நீர் உம்முடைய இருப்பிடத்துக்குச் செல்வீராக!'' எனக் கூறுவான். நான் அல்லாஹ்வின் ஆணைப்படி சுவர்க்கத்திற்குச் சென்று விடுவேன்.

மீண்டும், அந்நரகவாசிகளின் பேரிரைச்சல் கேட்டு மனம் பொறாமல், அர்ஷின் கீழ் வந்து சஜ்தா செய்வேன். அப்பொழுது,

''எனது அன்பரே! நீர் உமது நிலையை உயர்த்தும்; என்னிடம் விரும்பியதைக் கேளும்; எனினும், இவர்களின் பெற்றோரை நோவினைச் செய்த மனிதர்களாவர். அவர்களின் பெற்றோர் அவர்களை மன்னித்தாலன்றி நான் அவர்களை விடமாட்டேன்; அவர்களை மறந்துவிடுவீராக! சுவனம் செல்வீராக!'' என்னும் கட்டளை இறைவன் புறத்திலிருந்தும் வரும்.

நான் யாதொன்றும் கூறாமல் கட்டளைப்படி சுவனம் சென்று விடுவேன். அதன்பின், மூன்றாம் முறையும் அந்நரகவாதிகளின் கூக்குரல் கேட்டு என் மன விருப்பமின்றியே இறைவனிடம்,

''இறைவா! அவர்கள் படும் வேதனையைக் காண்பதற்காக நரகத்தின் வாசலைத் திறந்து விடுமாறு கட்டளைப் பிறப்பிப்பாயாக!'' என்று முறையிடுவேன்.

அதன்படி, நரகத்தின் காவலாளிக்கு இறைவன் கட்டளையிடுவான். (மாலிக்) காவலர் கதவைத் திறப்பார். நான் அங்குச் சென்று பார்த்திடும்பொழுது ஆண்களிலும், பெண்களிலுமாகப் பலர் நெருப்பினால் ஆன தூக்கு மரத்தில் தொங்கினவர்களாக இருந்திடுவர்.



சிலரின் தலைகளை இரும்புக் குறடுகளால் ஜபானிய்யாக்கள் அடிப்பார்கள். இன்னும் சிலரின் விலாப்புறங்களிலும், வயிறுகளிலும், அம்புகளை எய்துவார்கள். இன்னும் சிலரின் முதுகுகளிலும், தொடைகளிலும், நெருப்பால் ஆன கசைகளால் அடிப்பார்கள். பாம்புகளும், தேள்களும் அவர்களின் தொடைகளுக்குக் கீழே ஓடும், கடிக்கும். இத்தகைய கடுந்தண்டனைகளைக் கண்டு என் மனம் தாங்காதவனாக, மீண்டும் அர்ஷின் கீழ் சஜ்தாவில் வீழ்வேன். அப்பொழுது, அல்லாஹ் தன் அளப்பெரும் கொடைத் தன்மையினாலும் அருளாலும் என்னிடம் இவ்வாறு கூறுவான்:

''எனது அன்பரே! அவர்களின் பெற்றோர்களில் சிலர் சுவனபதியிலும், 'அஃராஃப்' மலையிலும், சிலர் நரகத்திலும் இருக்கின்றனர்; நீர் அவர்களிடம் சென்று, தம் பிள்ளைகளின் தவறுகளை மன்னித்து அவர்கள் அவர்களைப் பொருந்திக் கொள்ளுமாறு செய்துவிட்டு வாரும்'' (என்பான்).

''நாயனே! நரகத்திலுள்ளவர்களை எனக்குக் காண்பிப்பாயாக'' என்பேன். அல்லாஹ் காண்பிப்பான். அல்லாஹ்வின் கட்டளைப்படி, நான் அவர்களின் பெற்றோர்களை சுவர்க்கம், நரகம், அஃராஃப் மலை முதலியவற்றில் கண்டு அவர்களிடம்,

''உங்கள் பிள்ளைகளின் சதைகளை நெருப்புக் கரித்து விட்டது; எலும்புகளும் கரிந்து அவர்கள் நிறங்கள் கறுப்பாகி விட்டன. ஜபானிய்யாக்கள் அவர்களை வேதனை செய்கின்றனர். அவர்களின் அழுகுரல் கேட்டு என் மனம் மிகவும் வேதனையடைந்து விட்டது.

''எனவே, அவர்களின் குற்றங்களை மன்னித்துவிடுங்கள்'' எனக் கூறுவேன். அதுசமயம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் உலகத்தில் தங்களுக்கு இழைத்துவிட்ட தீவினை, வேதனைகள் முதலியவற்றை விவரிப்பார்கள்.

சிலர் ''அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய மகன், மகள் இவர்களுக்கு ஷபாஅத்து செய்யாதீர்கள். காரணம் உலகில் எங்களை மிகவும் இழிவாகக் கருதி தூற்றி வந்தார்கள்; எங்க ளின் மனங்களைப் புண்படுத்தினார்கள்'' என்பார்கள்.

சிலர், ''பாவிகளின் பரிந்துரையாளரே! எங்கள் மகன்கள் அவர்களின் மனைவிகளுக்கு நல்ல முறையில் உண்ண உண வும், உடுக்க உடைகளும் கொடுத்தனர்; எங்களைப் பசியிலும், நாகத்திலும், கந்தை ஆடைகளிலும் இருக்கச் செய்தனர்'' என்று ஒவ்வொரு தாய் தந்தையரும் தம் பிள்ளைகள் உலகத்தில் செய்த கொடுமைகளை விவரிப்பார்கள்.

நான் ''உலகம் முடிந்துவிட்டது, அதன் நிஃமத்துகளும் பாழாகிவிட்டன. இப்பொழுது அவர்களின் குற்றங்களை மன் னித்துவிடுங்கள்'' எனக் கூறுவேன். அப்பொழுது அல்லாஹ்,

''எனது ஹபீபே! எதுவரை அவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் குற்றங்களை மன்னிக்க மாட்டார்களோ அதுவரை நானும் வேதனையை நிறுத்த மாட்டேன்'' எனக் கூறுவான்.

நான் 'அகிலத்து மக்களைப் படைத்தாளும் இறைவா! அருளாளர்களிலெல்லாம் மிக்க அருளாளனே! அப்பெற்றோர் கள் தங்கள் பிள்ளைகள் படுகின்ற நரக வேதனைகளைக் காணும் நிலையினை ஏற்படுத்தினால் ஒருவேளை அவர்கள் தம் மக்களை மன்னிக்கக் கூடுமே! நீ நரகத்தின் காவலாளிக்கு ஆணையிடுவாயாக!'' என்பேன்.

அல்லாஹ் நரகத்தின் காவலாளிக்கு ஆணையிட்டு, அவர்க ளின் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் நரகத்தில் படும் வேதனை களைக் காண்பதற்கு வழி செய்வான். அப்பொழுது நான்



எல்லோரையும் அழைத்துக் கொண்டுச் சென்று காண்பிப் பேன். அப்பெற்றோர்கள் தங்கள் ஆண்மக்களும், பெண்களும் நரகத்தில் பல வகையான வேதனைகளை அனுபவிப்பதைக் காண்பார்கள். அக் கொடுமையான வேதனைக் காட்சிகளைக் கண்ணுற்ற அப்பெற்றோர்கள், தங்களுக்கு அப்பிள்ளைகள் இழைத்த கொடுமைகளையெல்லாம் மறந்து, ''எங்களின் ஈரல் குலைத்துண்டுகளே! இத்தகைய கொடுமைகளையெல்லாம் நீங்கள் அனுபவிப்பீர்கள் என்பதை நாங்கள் அறியோமே'' எனக் கதறி அழுவார்கள்.

அந்நேரத்தில், அந்நரகவாதிகள் தங்கள் பெற்றோரின் குரல் ஒலிகளை அறிந்துகொண்டு, தம் தலைகளை உயர்த்தி,

''எங்களின் தாய்மார்களே! தந்தைமார்களே! எங்களின் மீது இரக்கங் காட்டுங்கள்; எங்களின் தோல்களையும், தசைகளை யும் நெருப்புத் தின்று விட்டது. எங்கள் ஈரல் குலைகள் துண்டு துண்டாய் ஆகிவிட்டன; நாங்கள் சக்திகளை இழந்து விட் டோம்.

''உலகத்தில் எங்களின் மீது வெயில்படுவதற்கும் விட மாட்டீர்கள்; எங்கள் கால்களில் முள் குத்திவிட்டாலே வேத னைப்படுவீர்கள். இப்பொழுது நீங்கள் எங்களின் மீது இரங்கி, நரகத்தின் வேதனைகளை விட்டும் எங்களை காப்பாற்ற வழி செய்யுங்கள். எங்கள் மீது இரக்கங் காட்ட மாட்டீர்களா?'' என அலறுவார்கள்.

அப்பொழுது, அவர்களின் பெற்றோர்கள் தங்கள் மக்க ளின் வேதனைக் குரல்களைக் கேட்டுப் பொறுக்க முடியாமல் அழுதவர்களாக என்னிடத்தில் வந்து,

''ஷஃபீ உல்முDத்னிபீன்'' —''பாவிகளின் பரிந்துரையா ளரே! எங்கள் மக்களுக்காகப் பரிந்துரைச் செய்யுங்கள்'' என் பார்கள்.

அது சமயம், நான் ''வல்லோன் அல்லாஹ் உங்கள் மக்களின் மீது சினமுற்றிருப்பதே உங்களுக்காகவே; நீங்கள் உங்கள் பிள்ளைகளின் மீது அதிருப்தி கொண்டிருக்கிறீர்கள்; கோபம் கொண்டுள்ளீர்கள்; எனவே நீங்களே அவர்களுக்காக அல்லாஹ்விடம் மன்றாடுங்கள்'' எனக் கூறுவேன்.

அப்பொழுது அவர்கள், ''எங்களின் இறைவனா! எங்கள் மக்கள் மீது அருள் செய்து, அவர்களை நரகத்தை விட்டும் விடுதலை செய்வாயாக'' என மன்றாடுவார்கள்.

''நான் உங்கள் உள்ளங்களில் உள்ளவற்றை நன்கறிவேன். நீங்கள் உங்கள் மக்களின் குற்றங்களை மன்னித்து பொருந்திக் கொண்டீர்களா?'' என அல்லாஹ் கேட்பான்.

''எங்களின் இறைவா! நாங்கள் பொருந்திக் கொண்டோம்; நீயும் அவர்களைப் பொருந்திக் கொள்வாயாக!'' எனக் கூறுவார்கள்.

அல்லாஹ் நரகக் காவலாளியாகிய மாலிக்கை விளித்து, ''எவர்களின் பெற்றோர்கள் தம் மக்களின் பிழைகளை மன்னித்து அவர்களைப் பொருந்திக் கொண்டார்களோ, அம்மக்களை மட்டும் நரகத்திலிருந்து வெளியாக்குவீராக!'' எனக் கட்டளையிடுவான்.

அக்கட்டளைப்படி மாலிக் அவர்கள் நரகத்திலிருந்து அவர்களை வெளியாக்கி, 'பஹ்ருல் ஹயாத்' என்னும் கடல் நீரால் குளிக்கச் செய்வார். அப்பொழுது அம் மக்களின் உடலிலுள்ள தோலும், சதையும் சரியாகி விடும்; அதன்பின் சுவர்க்கத்தில் நுழைவார்கள்.

என்ன கேட்டீர்களா? எத்தனைக் கொடுமை! எவ்வளவு நரக வேதனை! இந்நிலை நம்முடைய பிள்ளைகளுக்கு ஏற்பட வேண்டும் என்று நாம் விரும்புவோமா? நிச்சயம் விரும்பமாட்டோம். அவ்வாறாயின், நம் பிள்ளைகள் நரகம் புகாதிருக்க நாம் அவர்களை மார்க்க ஒழுக்கத்துடன் வளர்த்து வரவேண்டும்.



மேலும் கேளுங்கள், நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

''நான் உங்களுக்கு மூன்று செய்திகளை அறிவுறுத்துகின்றேன். 1. தொழுகையைப் பேணுதலுடன் தொழுது வாருங்கள். 2. பெற்றோர்களுக்கு நன்றி செலுத்துவதில் மாறுதல் செய்யாதீர்கள். 3. உங்கள் அடிமைப் பெண்களைத் துன்புறுத்தாதீர்கள். பெற்றோர்க்கு நன்றி செலுத்துவதன் மூலம் உங்கள் வாழ்நாள் அதிகரிக்கப்படுகின்றது.

''என் ஆன்மா எவன் வசமிருக்கிறதோ, அந்த இறைவன் மீது ஆணையாக!

''ஓர் அடியானின் வாழ்நாட்களில் மூன்று ஆண்டுகளே மீதி இருந்திடும் நிலையில், அவன் தன் பெற்றோர்களுக்கு நன்றி செலுத்திப் பணிவிடைகள் செய்து வருவானாயின், அவனின் மூன்று ஆண்டுகள் குறுகிய வாழ்நாட்களும் முப்பதாண்டுகளாக நீட்டப்பட்டு விடும்.''

மேலும், ஓர் அடியானுக்கு முப்பதாண்டுகள் வாழ்நாட்கள் நீண்டிருக்க அவன் பெற்றோரை நோவினைகள் செய்து வருவானாயின் அவனின் முப்பது வயதும், ஒரு வயதாகக் குறுக்கப் பெற்றுப் போவான்.

அது போன்றே நெருங்கிய உறவினர்களை அரவணைத்து நன்றி செலுத்தி வருபவனின் வாழ்நாளும் நீளமாக்கப்படும். அவர்களைப் புறக்கணித்தும், நோவினைகள் செய்தும் வாழ்பவனின் வாழ்நாட்களும், உணவு வகைகளும் குறைந்து விடும்.

மேலும் அல்லாஹ்வின் கோபத்திற்கும் ஆளாவான். 'காதிவுர் ரஹ்மு' எனப்படும் உறவினர்களை முறித்து நடப்பவனை அல்லாஹ் இவ்வுலகில் தண்டனை கொடுக்காது போய்விட்டாலும், மறுமையில் வேதனை செய்வான். அவனின் உயிர் நரகத்தில் முகப்பில் 'பர்ஹூத்' என்னும் கிணற்றில் மறுமை நாள் வரையும் தரிபட்டிருக்கும்.

மேலும் நபி (ஸல்) கூறினார்கள்:- எவன் தாய் தந்தையரை நோவினைச் செய்வானோ நிச்சயமாக அவன் அல்லாஹ்விற்கும், அவனின் ரசூலுக்கும் பாவியாவான். அந்த 'ஆக்குல் வாலிதைன்' இறந்து மண்ணறையில் அடக்கப்படுவானாயின், அவனின் இரு விலாப்புறங்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திடுமாறு மண்ணறை அவனை நெருக்கும். மறுமை நாளில் 'ஆக்குல் வாலிதைன்' என்பவன், விபச்சாரம் செய்தவன், முஷ்ரிக் எனும் இணைவைத்து வணங்கியவன் ஆகிய மூவரும் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

## ஹிகாயத்

ஒரு வலியுல்லாஹ் ஒரு நிகழ்ச்சியைக் கூறுகின்றார்கள்:- நான் ஒரு கப்ருஸ்தான் வழியே போய்க் கொண்டிருந்தேன்; அது சமயம் ஒரு கப்றிலிருந்து புகையும், நெருப்பும் வெளியாகிக் கொண்டிருந்தன. அவற்றைக் கண்ணுற்ற நான் வியப்படைந்து அங்கு நின்றேன்; அதற்கிடையே கப்று பிளந்து நெருப்பின் தீப்பிழம்பு வெளியாயிற்று. அம்மண்ணறையிலிருந்து கருத்த ஒரு மனிதர், தம்முடைய ஒரு கையில் இரும்பினால் ஆன ஒரு குறடும், மறு கையில் கருநிற கழுதை ஒன்றையும் பிடித்திருந்தார்.

அம்மனிதர் தம் கையில் இருந்த குறடால் கழுதையின் தலையில் அடித்தார். அக்கழுதை கூக்குரல் இட்டது. பின்னர்



இரும்பால் ஆன விலங்கை மாட்டி கழுதையை கப்றில் இழுத்துக்கொண்டு அவரும் உள்ளே சென்று விட்டார்; மீண்டும், அம்மண்ணறை சரிசமமாகி விட்டது.

இதனைப் பார்த்து வியப்புற்றவனாக சிந்தனையில் மூழ்கியிருந்தேன்; அந்நேரத்தில் அங்கு ஒரு பெண் வந்தாள். அப்பெண்ணிடம் இதுபற்றி வினவினேன்.

''அக்கழுதை ஒரு மனிதனாவான். உலகில் வாழ்ந்த போது குடிப்பதும், விபச்சாரம் செய்வதும் போன்ற தீய செயல்களில் மூழ்கியிருந்தான். அவனின் தாய் அவனை அத்தவறுகளிலிருந்து விலக்கி வந்தாள். அவன் தாய் சொல்லைக் கேளாமல் தாயைப் பார்த்து,

''நீ என் கழுதை போலக் கத்துகின்றாய், சும்மா கிட'' என்று சொல்லி வந்தான்; அவன் இறந்தபின் அல்லாஹ் அவனைக் கழுதையாக்கி விட்டான்; ஒவ்வோர் இரவும் கப்றிலிருந்து வெளியாவான்; அக்கருத்த மனிதர் மலக்கு ஆவார். அவர் தம் கையிலிருக்கும் குறடால் கழுதையின் தலையில் அடித்து சத்தமிடு என்று கூறுகின்றார். மற்றவற்றை நீங்கள் பார்த்தீர்களே'' என்றாள்.

நஊதுபில்லாஹி மின்அZதாபில் கப்றி வமின் அZதாபின்னாரி.

அல்லாஹ்விடம் கப்ரின் வேதனையை விட்டும், நரக நெருப்பின் வேதனையை விட்டும் பாதுகாப்புத் தேடுகின்றோம்.

மேலும் இன்னொரு நிகழ்ச்சியைக் கூறுகின்றோம், கேளுங்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஒருநாள் தம் அன்புத் தோழர் 'அபூதர்ருல் கிஃபாரி' (ரலி) அவர்களிடம், ''நாம் வறியவர்களைச் சந்தித்து விட்டு வரலாம் வாருங்கள்'' என்றார்கள். அதற்கு அபூதர்ருல் கிஃபாரி(ரலி) அவர்கள்,

''அல்லாஹ்வின் தூதரே! வறியவர்கள் என்றால் யார்?'' என்று வினவியபோது, ''எவருமே அவர்களைச் சந்திக்க மாட்டார்களே அவர்கள்தான்'' என்றார்கள்.

''அல்லாஹ்வின் தூதரே! இறந்தவர்களையா கூறுகின்றீர்கள்?'' எனக் கேட்க, 'ஆம்' என்றனர். பின்னர் இருவரும் மண்ணறைக்கு வந்தனர். அங்குள்ள ஒரு மண்ணறை அருகே நின்று அழ ஆரம்பித்துவிட்டார்கள் அண்ணலார் (ஸல்) அவர்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அழுவதைக் கண்ட அன்புத் தோழர், ''அல்லாஹ்வின் தூதரே! ஏன் அழுகின்றீர்கள்'' எனக் கேட்க,

''இம்மண்ணறையில் உள்ள என் உம்மத்தைச் சேர்ந்தவருக்கு வேதனை செய்யப்படுகிறது'' எனக் கூறினார்கள்.

அது சமயம் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அங்கு வருகை தந்து, ''அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் அழுவதால் விண்ணிலுள்ளவர்களும் (மலக்குகளும்) அழுகின்றனர்'' என்றனர். அது கேட்டு நபி (ஸல்) அவர்கள்,

''ஜிப்ரயீலே! இம்மண்ணறையில் வேதனைச் செய்யப்படுபவர் ஓர் இளைஞரைபோல் இருக்கிறதே!'' என்று கேட்டார்கள்.

''ஆம்! இவர் அன்சாரி கிளையைச் சேர்ந்தவர்'' என ஜிப்ரயீல் (அலை) விடையளித்தார்கள்.



''ஏன் இவர் வேதனைச் செய்யப்படுகிறார்?'' என நபி (ஸல்) அவர்கள் கேட்க,

''தாங்களே அல்லாஹ்விடம் துஆக் கேட்டு, அந்த இளைஞன் வேதனையளிக்கப்படுவதன் காரணத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்'' என ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறினார்கள்.

அண்ணலார் (ஸல்) அல்லாஹ்விடத்தில் துஆ இறைஞ்சியபின், மண்ணறையினுள் அந்த இளைஞரின் வேதனைக்குரலைக் கேட்கலானார்கள்; அப்பொழுது மண்ணறையிலிருந்து,

''அல்லாஹ்வின் தூதரே! என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்! என் மேல் புறத்திலும், கீழ்ப்புறத்திலும், எனது வலப்புறமும், இடப்புறமும் நான் என் அன்னையை நோவினைச் செய்த காரணத்தால் நெருப்புப் பிழம்புகள் என்னை வாட்டியெடுக்கின்றது. என்னைக் காப்பாற்றுங்கள் நாயகமே!'' எனும் கதறல் ஒலியைக் கேட்டு நபி (ஸல்) அவர்கள்,

''அபூதர்ரே! நீர் உடனே மதீனா சென்று இம்மண்ணறையில் எவர்களையெல்லாம் அடக்கம் செய்யப்பட்டுள்ளதோ அவர்களின் உறவினர்களை இங்கு அழைத்து வாரும்'' எனக் கூறியனுப்பினார்கள்.

அவ்வாறே நபித் தோழரும் மதீனாவிலிருந்து பலரை மண்ணறைக்கு அழைத்து வந்தனர். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள்,

இம்மண்ணறையிலுள்ள இளைஞரின் தாயாரை அதன் அருகே வருமாறு வேண்ட, இரண்டு நாட்களுக்குப்பின் அடக்

கம் செய்யப்பட்ட அந்த இளைஞரின் மண்ணறையருகே ஒரு கிழவி கம்பூன்றியவாறு வந்து நின்றார்.

அக்கிழவியைப் பார்த்து, ''தாயே! இந்தக் கப்றிலுள்ளவன் யார்?'' எனக் கேட்க, ''இக்கப்றில் அடக்கம் செய்யப்பட்டுள்ள வன் என் மகனே'' என்றார்.

''நீர் இவனின் குற்றத்தை மன்னித்து, உம் மகனைப் பொருந்திக் கொண்டால், இவனின் வேதனை நீக்கப்பட்டு விடும்; இல்லையாயின், மேலும் வேதனைக்கு ஆளாகியே தீருவான்.'' என நபி (ஸல்) கூறினார்கள்.

அம்மூதாட்டி ''நான் பொருந்தமாட்டேன்.'' என்றார். ''என்ன காரணத்தால் நீர் உம் மகனைப் பொருந்தவில்லை'' என நபி (ஸல்) அவர்கள் வினவ,

அம்மூதாட்டி, ''நான் ஒரு சமயம் தொழுத இடத்திலேயே அமர்ந்திருந்தேன்; என் மகன் குடித்துவிட்டு வந்து என்னை அடித்தான்; எனக்குக் காயம் ஏற்பட்டது; அப்பொழுது நான்,

''அல்லாஹ் உன்னைப் பொருந்திக் கொள்ளமாட்டான்'' எனக் கூறி 'பத்துஆ' செய்துவிட்டேன்'' என்றார்.

நபி (ஸல்) அவர்கள், அம்மூதாட்டியைப் பார்த்து, ''உம்மு டைய மகன் மீது இரக்கங் காட்டுங்கள்; அவ்வாறு இரங்காவிட் டால் அல்லாஹ்வும் இரக்கம் காட்ட மாட்டான்'' என்றார்கள்.

''அல்லாஹ்வின் தூதரே! இவனின் மீது எனக்கு இரக்கமே ஏற்படவில்லையே!'' எனக் கூறியபோது,

''தாயே! உம்முடைய காதைக் கப்றில் வைத்து உம் மகனின் வேதனைக் குரலைக் கேட்பீராக!'' என நபி (ஸல்) வேண்டினார்கள்.



அவ்வாறே அந்த தாய் தம் மகனின் மண்ணறையில் காது கொடுத்துக் கேட்டார், அது சமயம் கப்றிலிருந்து,

''என் தாயே! என்மீது இரக்கம் காட்டுங்கள்; இல்லையா யின்,. இந்நிலையிலேயே மறுமைநாள் வரையும் வேதனை செய்யப்படுவேன்'' என்னும் கதறியழும் ஒலியைக் கேட்டு, அந்தத் தாயின் உள்ளம் நைந்து கண்ணீர் சிந்தியவராக,

''அல்லாஹ்வின் தூதரே! என் மகனின் குற்றத்தை மன் னித்து, அவனைப் பொருந்திக் கொண்டேன்'' எனக் கூறிய உடனேயே, அவ்விளைஞரின் கப்று வேதனைகள் நீக்கப் பட்டு, அல்லாஹ் அவரை சுவனத்தில் சேர்த்து விட்டான்.

எனவே, அன்பர்களே!

தாய் தந்தையரின் பொருத்தத்தில்தான் அல்லாஹ்வின் திருப்பொருத்தம் இருக்கிறது என்பதையும், அவர்களின் வெறுப்பில் அல்லாஹ்வின் வெறுப்பும் உள்ளது என்பதையும் உணர்ந்து பெற்றோர்க்கு வழிபட்டு நடந்து வருவதுடன், அவர்களுக்கு நன்றி செலுத்தி, அவர்களின் அன்பையும், திருப்பொருத்தத்தையும் பெற்று அல்லாஹ்வின் அன்பையும், திருப்பொருத்தத்தையும் பெறுவதற்கு முயற்சி செய்வோமாக!

ஒருவரின் பெற்றோர் இறந்து விட்டிருந்தால் அவர்களுக் காக துஆ இறைஞ்சி வருவதும், பிழை பொறுக்கத் தேடுவதும் வாஜிபாகும்.

மேலும், அப்பெற்றோர்களுக்காக ஓதப்படும் குர்ஆன், யாஸீன் போன்றவற்றுக்கு இவ்வளவு பணம் கூலி கொடுப்ப தாக நிபந்தனையிடாமல், அல்லாஹ்வுக்காக இதனை நேர்ச்சை செய்கிறேன்; தாங்களும் அல்லாஹ்விற்காக ஓதி, இன்னார் பெயரால் ஹத்யா செய்யுங்கள் என ஓதுபவர்களிடம் கூற வேண்டும்.

ஓதுபவர்களும் பணத்தை எதிர்பார்க்காமல் ஓதுவது நன்மையாகும்.

மேலும் அப்பெற்றோரின் மண்ணறையை ஜியாரத்து செய்து அவர்களுக்குப் பிழை பொறுக்கத் தேடி இறைவனிடம் இறைஞ்ச வேண்டும்.

# பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டியவை:

இறையன்பர்களே!

நாம் இன்றைய பொழிவில் தாய் தந்தையர் தம் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் குறித்துக் கூறிட விழைகின்றோம்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''சத்தியமாக ஒரு மனிதன் தன் குழந்தைக்கு (ஒரு) நல்லொழுக்கம் கற்பித்தலானது, ஒரு மரக்கால் (தானியம்) அறம் வழங்குவதை விடவும் அவனுக்கு நலமானதாகும்.

என்ன கேட்டீர்களா? எல்லா வகையான செல்வங்களும், வசதி வாய்ப்புகளும் ஒருவனிடமிருந்தும் அவனுக்கு பிள்ளைப்பேறு இல்லையென்றால் அதனால் என்ன பயன் விளையமுடியும்?

காலமெல்லாம் பிள்ளைப்பேற்றுக்காக முயற்சிகள் செய்து, போகாத தர்காஹ்கள் இல்லை; சுற்றாத மரமில்லை;



தர்காஹ்களில் கட்டப்படாத தொட்டில்கள் இல்லை; கட்டாத தாயத்துகள், பார்க்காத மருத்துவர்கள் இல்லை. இவ்வளவு முயற்சிகளுக்குப் பிறகும் பிள்ளைப் பிறக்கவில்லையென்றால் பெற்றோரின் மனம் என்ன பாடுபடுகிறது. இந்தக்காலத்தில் ஆலிம்சாக்களுக்கே அல்லாஹ்வின் மீது நம்பிக்கைப் போய், தம் மனைவியுடன் தர்காஹ்வில் உருண்டு கிடக்கின்ற அவல நிலையினைப் பார்க்கின்றோம். சரி; இத்துணை முயற்சிகளுக்குப் பிறகு இறையருளால் குழந்தைப் பிறந்து விட்டதென்றால் அக் குழந்தையை எவ்வாறு வளர்க்கின்றோம்?

நீண்ட காலத்திற்குப்பின் வாராது வந்த மாமணி போல் எண்ணி அக்குழந்தைக்கு மிகுதியானச் செல்லம் கொடுத்து வளர்த்து, அதன் போக்கிலேயே வளர விட்டு, ஒழுக்கம் தவறிவிட்டால் பின்னர் தலையில் கை வைத்துக் கொள்கின்றோம். இன்றைக்குப் பெரும்பாலோரின் நிலை இது தானே! பிள்ளைகளைப் பேணி வளர்க்கவோ, அவர்களுக்கு மார்க்க ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுக்கவோ முயற்சி எடுக்கின்றோமா என்றால் இல்லை.

நம் குழந்தைகளைச் சிறு வயதிலேயே கிறித்துவக் கான்வென்டில் சேர்த்து விடுகின்றோம்; போதாக் குறைக்கு ஆபாச மிக்கத் திரைப்படங்களுக்கும் அழைத்துச் சென்று, அவர்களின் இளம் உள்ளத்தில் தீய கருத்துக்களை முளையிடச் செய்து விடுகின்றோம். பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்குச் செய்கின்ற துரோகம் இவற்றை விட வேறெவையும் இருக்க முடியாதன்றோ!

# பிள்ளைகளின் சிறப்பு:

அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கின்றார்கள்:- ''நபி (ஸல்) அவர்கள் முன் ஒரு குழந்தை கொண்டுவரப்பட்டது; அவர்கள் அதனை முத்தமிட்டு, 'நிச்சயமாக இவர்கள் (பெற்றோரின்) கஞ்சத்தனத்திற்கும் கோழைத்தனத்திற்கும் காரணமானவர்; மேலும், நிச்சயமாக இவர்கள் அல்லாஹ்வின் மலர்களை (செல்வத்தை)ச் சேர்ந்தவராவர்'' எனக் கூறினார்.''

—ஷரஹுஸ்ஸுன்னா.

மேலும் கேளுங்கள், அபூஹுரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள்:- ''அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் அக்ரஉ இப்னு ஹாபிஸ் இருக்கும்போது அலீயின் புதல்வர் ஹஸனை முத்தமிட்டனர். அப்பொழுது, ''எனக்குப் பத்து பிள்ளைகள் இருக்கின்றார்கள்; நான் அவர்களில் ஒருவரையாவது முத்தமிட்டதில்லை.'' என்று அக்ரஉ கூறினார். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவரை நோக்கி, 'அன்பு கூராதவன் (அல்லாஹ்வினால்) அன்பு கூரப்பட மாட்டான்' எனக் கூறினார்கள்.

—முத்தபிகன் அலைஹி

நபி (ஸல்) அவர்கள் பெண்மக்களின் சிறப்பினைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்:-

''ஒருவனுக்கு ஒரு பெண் மகவு இருந்து, அதனை அவன் உயிரோடு புதைக்காமலும், அதனைத் தாழ்மையாய் நடத்தாமலும், அதனை காட்டினும் தம் புதல்வனை அதாவது ஆண் மகனை உயர்வாய்க் கருதாமலும் இருப்பானாயின் அல்லாஹ் அவனை சுவர்க்கத்தில் புகுத்துவான்.''

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி): அபூதாவூது.



மேலும் கூறினார்கள்:-

''பருவம் அடையும்வரை இரு பெண் மக்களைப் பரிபாலன்ஞ் செய்கின்றவன் இறுதித் தீர்ப்பு நாளில் வருவான்; நானும் அவனும் இவ்வாறு (இருப்போம்)'' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அருளிச் செய்து, தமது விரல்களைச் சேர்த்தனர்.''

—அனஸ் (ரலி): முஸ்லிம்.

என்ன கேட்டீர்களா பெண் இனத்தின் மாண்பினைக் குறித்து அண்ணலாரின் அறிவுரைகளை!

இன்றைக்கு நாம் என்ன எண்ணுகின்றோம். பெண் குழந்தைப் பிறந்து விட்டது என்றாலே முகத்தைச் சுளிக்கின்றோம்; பொட்டையா? என்கின்றோம். இழிவாகக் கருதுகின்றோம். காரணம் நிறைய கைக்கூலி கொடுக்க வேண்டுமே? நகைகள் போட வேண்டுமே? பொட்டையன்றோ பிறந்துத் தொலைந்து விட்டது என் செய்வோம் எனக் கலங்குகின்றோம்.

நாட்டில் பெட்டைகள், அலிகள் பெருத்து விட்ட காரணத்தால் பெண் மக்களுக்கு கைக்கூலி கொடுக்க வேண்டிய இழிந்த நிலை உருவாகி விட்டது. எல்லாவற்றையும் எளிதாக்கி வைப்பவன் அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்னும் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்திடுமாயின் இதற்காகவெல்லாம் கவலைப்பட வேண்டிய தேவையே இல்லை.

நமக்கு எந்தக் குழந்தையால் நன்மைகள் விளையும், தீமைகள் விளைந்திடும் என்பதை நீங்களோ, நாமோ உறுதியாகக் கூறிட முடியுமா? முடியாது. எனவே, அல்லாஹ் நமக்களித்திடும் பிள்ளைச் செல்வங்களைப் பேணி வளர்த்து, அவர்களுக்கு மார்க்க ஒழுக்கங்களைக் கற்பித்துக் கொடுத்து, நேரிய

வழியில் வளர்க்க முயல்வதே பெற்றோரின் கடமையாகும் என்பதை நாம் உணர்வோமாக!

## தந்தையின் கடமை!

குழந்தைப் பிறந்தவுடன் அக்குழந்தைக்கு அழகிய பெயரைச் சூட்டவேண்டும். குறிப்பாக அல்லாஹ்வின் திருப்பெயர்களில் ஒன்றுடன் அப்து என்னும் சொல்லை இணைத்து, அப்துல்லாஹ், அப்துற்றஹ்மான், அப்துற் றஹீம் எனும் பெயர்களையோ, நபிமார்களின் பெயர்களில் ஒன்றையோ வைக்க வேண்டும்.

பெண் குழந்தையாயின் நம்முடைய 'உம்முல் முஃமின்'களாகிய கதீஜா, ஆயிஷா, உம்மு குல்ஸூம், உம்மு ஹபீபா, ஃபாத்திமா என்னும் அழகு பெயர்களின் ஒன்றைச் சூட்ட வேண்டும்.

ஆனால், இன்றைக்கு நாகரிகம் என்னும் பெயரால், புதுமையான பெயர்களைச் சூட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் கூத்தாடிப் பயல்களின் பெயர்களையும், குச்சிக்காரிகளான நடிகைகளின் பெயர்களையும் சூட்டுகின்றனர். இவர்களுக்குச் சிறிதளவாவது மான உணர்ச்சியும், இஸ்லாமியப் பற்றும் இருந்திருந்தால் இத்தகைய இழி கழுதைகளின் பெயர்களைப் பெண்குழந்தைகளுக்குச் சூட்டுவார்களா?

ஷர்மிளா தாகூர், சாயிராபானு இன்னும் என்ன இழவுகளையெல்லாமோ பெயராகச் சூட்டி மகிழ்கின்றனர் மானங் கெட்டவர்கள்.



நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நபிமார்களின் பெயர்களை வையுங்கள். ஒரு வீட்டில் அப்துல்லாஹ், அஹ்மது, முஹம்மது இவ்வாறு மூன்று பெயர்கள் இருந்தால் வறுமையும், பலாயும் அணுகாது என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

நாம் எத்துணைப் பேர் இந்த நபிமொழியின்மீது நம்பிக்கை வைத்துள்ளோம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். மேலும் 'மலிக்குல் முலூக்', 'காளியுல் குளாத்' என்பன போன்ற மார்க்கத்தில் இல்லாத பெயர்களை வைப்பதும், ஒட்டகை மூப்பன், குப்பன், கதிரவன், பிச்சை, பொன்னையன் என்றெல்லாம் வைப்பதும் மக்ரூஹ் தஹ்ரீம் ஆகும். இத்தகைய பெயர்கள் சூட்டுவதைக் கண்டித்து, 'தன்பீஹுல் காபிலீன்', ''முன்ரூல் குலூப்'; 'புஸ்தானுல் ஆரிபீன்' ஆகிய நூற்களில் எழுதப்பட்டுள்ளது.

மேலும், குழந்தைகட்குத் திருக்குர்ஆனை ஓதிக்கொடுப்பதும், தீனுடைய கல்விகளைக் கற்றுக் கொடுப்பதும் பெற்றோரின் நீங்காக் கடமையாகும்.

பிள்ளைகள் ஆறு வயதினை அடைந்து விட்டால் அவர்களுக்கு ஒழுக்கத்தினை கற்றுக் கொடுப்பதும், ஏழு வயதினை எற்றி விட்டால் அவர்களைப் படுக்கையை விட்டுப் பிரித்துத் தனியாக்குவதும், ஏழு வயதில் தொழுகையைக் கொண்டு பழக்குவதும், பத்து வயதில் அடித்துத் தொழ வைப்பதும், எல்லாப் பிள்ளைகளையும் ஒரே மாதிரியாக சமமாக நடத்துவதும் பெற்றோரின் கடமையாகும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு நல்லறிவையும், நல்லொழுக்கத்தையும் கற்றுக் கொடுக்காது வளர்க்கப்பட்டு, அப்பிள்ளைகள் பாவங்கள்

செய்வார்களாயின் அக்குற்றம் யாவும் பெற்றோர்களையே சாரும் என்று!

ஆனால், பருவ வயதினை அடைந்து, பகுத்தறியும் நிலையைப் பெற்று விட்டவர்கள் தாம் செய்திடும் நன்மை தீமைகட்கு அவர்களே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளுக்கு மார்க்கக் கல்வியும், மார்க்க ஒழுக்கமும் கற்றுத்தராது அவர்களை ஆடு மாடுகளைப் போன்று வளர்த்து விட்டு, பின்னர் மகன் ஏசுகின்றான், அடிக்கின்றான் என்றெல்லாம் குறைப்பட்டு கொள்வதில் எத்தகையப் பயனுமில்லை.

அபீஹFப்ஸினில் ஸமர்கந்தி (ரஹ்) என்னும் பெரியாரிடம் ஒரு மனிதர் தம் மகனை அழைத்து வந்து, ''இவன் என் மகன், என்னை அடிக்கின்றான்.'' எனக் கூறியபோது அப்பெரியார் வியப்புற்றவர்களாக ''என்ன உன் மகன் உன்னை அடிக்கிறானா? சுப்ஹானல்லாஹ்!'' என்றார்கள். அம்மனிதர், ''ஆம், என் மகன் என்னை அடிக்கின்றான்.'' என்றார். அதற்கு அப்பெரியார் அம் மனிதனை நோக்கி ''நீ அவனுக்கு இல்மையும், ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுத்தாயா?'' எனக் கேட்டார்கள். அதற்கவர் ''இல்லை'' என்றார். ''நீ, அவனுக்குக் குர்ஆனையாவது கற்றுக் கொடுத்தாயா?'' என வினவினர். அவர் ''இல்லை'' என்றார். ''சரி; அவன் என்ன வேலை செய்கின்றான்'' எனக் கேட்டபோது, ''வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளான்'' என்றார். ''உன்னை அவன் அடிப்பதற்கான காரணத்தை அறிவாயா?'' என வினவியபோது, ''யான் அறியேன்'' என்றார்.

அவர்கள் கூறினார்கள், ''உன் மகன் ஒவ்வொரு நாளும் பொழுது புலர்ந்ததும் வயலுக்குச் செல்லும் போது அவனுக்கு



முன்னால் மாடும், அவன் கழுதையின் மீதும், பாதுகாப்பிற்காக நாயும் பின்னே வர செல்கின்றான். நீயும் அவ்வாறே வளர்த்து விட்டாய். எனவேதான் அவன் உன்னையும் உழவு மாடாக எண்ணி அடித்துவிட்டான். இந்த அடியுடன் விட்டதற்காக நீ அல்லாஹ்விற்கு நன்றி செலுத்து'' என்றார்கள்.

என்ன கேட்டீர்களா? இன்றைக்கு நாம் பார்க்கின்றோம்; பிள்ளைகளை ஒழுக்கத்துடன் பேணி வளர்க்காத காரணத்தால் வீட்டிலும், தெருவிலும் அவர்களிடம் உதை வாங்கும் பெற்றோர்களை!

எனவே, அன்பர்களே! நாம் பிள்ளைகளை ஒழுக்கத்துடன் வளர்ப்பதற்கு முற்படுவதற்கு முன் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். என்னவென்று கேட்கின்றீர்களா? நம்முடைய விந்துத்துளிகள் கருப்பையில் விழும்போதே அது முறையுடன், ஒழுக்கத்தைத் தழுவியதாக விழவேண்டும். மனைவியுடன் ஆடுமாடுகளைப் போன்ற உடலுறவு கொள்ளக் கூடாது. அதற்கென சில ஒழுங்கு முறைகள் இருக்கின்றன. அந்த ஒழுங்குமுறைப்படி அவர்களை அணுகினால்தான் விழும் விந்துத்துளிகளும் முறையுடன் வளரும். நம்முடைய இரத்தமே நம் குழந்தைகள். நம்மிடையே தீய உணர்வுகள், தீய எண்ணங்கள், மாற்றாளைப் பற்றிய சிந்தனைகள், ஆபாச மிக்கத் திரைப்படக் காட்சிகள், அக்காட்சிகளைக் கண்டுவிட்டு, அதே உணர்வுடன் கணவனும் மனைவியும் புணர்ந்திடும் போது நமக்குப் பிறக்கின்ற குழந்தை எத்தகையவர்களாக இருப்பார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். ஒழுக்கம் நம்மிடமிருந்தே ஆரம்பமாக வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். சுவர்க்கத்து மலர்களாகிய அக்குழந்தை செல்வங்கள் நாடும்,

ஏடும் போற்றும் நற்குழந்தைகளாக வளர்ந்து மிளிர்ந்திட நாம் ஒவ்வொருவரும் முயற்சியினை எடுத்துக் கொள்வோமாக!

அல்லாஹ்வே! எங்கட்குப் பிறக்கும் குழந்தைகள் உன்னை திக்ரு செய்வதை விட்டும் எங்களை மறக்கடிக்காதவர் களாகவும் உன் வழியில் தியாகம் செய்திடும் பேற்றினைப் பெற்றவர்களாகவும் அவர்களைத் தந்தருள்வாயாக!

உன்னை மறந்தோரில் எங்களை ஆக்கி விடாதே ஆமீன்!

# கணவன் - மனைவியர் கடமைகளும் உரிமைகளும்!

இறையன்பர்களே! சென்ற பொழிவில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு ஆற்றவேண்டிய கடன் குறித்து கூறினோம். இன்றைய சொற்பொழிவில் கணவன் மனைவியர்கள் ஒவ் வொருவருக்குரிய கடமைகள் பற்றிக் கூறுகின்றோம்; கேட்டுச் செயல்படுங்கள்.

வல்ல அல்லாஹ் தன் திருமறையில், ''அவர்கள் உங்க ளுக்கு ஆடையைப் போன்றும், நீங்கள் அவர்களுக்கு ஆடை யைப் போன்றுமாவீர்கள்'' எனக் கூறுகின்றான். அடடா! எத்துணை ஆழமான கருத்து!

நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே, ஆள் பாதி; ஆடை பாதி என்று! ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்; மனிதன் ஆடையைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றான். இந்த ஆடை



வகைகளே முழு ஆடைகளாக உருப்பெற்றது முஸ்லிம்களால் தான் என்பதையும் மறந்து விடக்கூடாது. பண்டையக் காலங்க ளில் ஆண்களும், பெண்களும் முழு ஆடைகளை அணிந்தவர்க ளல்லர்; இஸ்லாம் இங்கு வந்தபின்னர்தான் மேலாடை அணி கின்ற நிலை உருவானது. ஏனென்றால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்தாம் ஹயா என்னும் நாண உணர்ச்சிக்கு முதலிடம் கொடுத்தவர்கள்; அவர்கள் என்றைக்குமே எவர் முன்னிலையி லும் தங்கள் உடலைக் காண்பித்தவர்களல்லர்; அத்துணை நாணமுள்ளவர்கள். அதனால்தான் உடலை மறைக்கின்ற முழு உடையை நமக்குக் கற்றுக் கொடுத்தார்கள். ஐநூறு ஆண்டுக ளுக்கு முன்னர் நம்மவர்களே மிகுதியாகத் தையல்காரர்களாக இருந்தனர் என்பதை அறிவோமாக!

சரி; செய்திக்கு வருவோம். அல்லாஹ் கூறுகின்றான்: ''கணவன் மனைவியர் இருவரும் உங்களுக்குள் ஒருவருக்கொ ருவர் மானத்தை மறைத்திடும் ஆடை போன்றுள்ளீர்கள்'' என்பதாக!

ஆம்! கணவனின் மானத்தையும், தம் பெற்றோரின் மானங்களையும் புகுந்த வீட்டிற்குச் செல்லும் மனைவியான வள் மறைத்திடும் ஆடைப்போன்று இருக்க வேண்டும்.

அது போன்றே கணவன் என்பவன் தன் மானத்தையும், தன் மனைவியின் மானத்தையும், தன் பெற்றோரின் மானத்தை யும் மறைத்திடும் ஆடையினைப் போன்று இருந்திட வேண் டும். இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்; விரிவஞ்சி இத்துடன் விடுகின்றோம்.

# கணவனின் கடமை!

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:- ''உங்களில் தனது குடும்பத்திற்கு நல்லவனாகயிருப்பவனே உங்களுக்குள் மிக நல்லவன். எனது குடும்பத்திற்கு உங்கள் யாவரினும் நான் மிக நல்லவனாகயிருக்கின்றேன்.''

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி); திர்மிதி, இப்னுமாஜா

மேலும் கூறினார்கள்: ''(இறைவனின் சன்மானத்தை) எதிர்பார்த்தவனாக தனது குடும்பத்திற்கு ஒரு முஸ்லிம் செலவிடுவானாயின், அது(வும்) அவன் செய்த அறமாகப் பாவிக்கப்படும்.''

அறிவிப்பவர்: அபூமஸ்வூத் (ரலி); முத்தபிகன் அலைஹி

அண்ணலாரின் கூற்றினைக் கேட்டீர்களா? ஒரு குடும்பத் தலைவன் எவ்வாறிருக்க வேண்டும்; எம்முறையில் தம் குடும்பத்தவருடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

**ரிவாயத்:**

ஹலரத் இப்ராஹீம் கலீலுல்லாஹி அலைஹிஸ்ஸலாம் அல்லாஹ்வினிடம், தமது மனைவி சாரா அம்மையாரின் தீய குணத்தைப் பற்றிக் குறைப்பட்டு முறையிட்டார்கள். அது போது அல்லாஹ் ''என்னுடைய தோழரே! நாம் எல்லாப் பெண்களையும் இடப்புறத்தின் விலா எலும்பினால் படைத்துள்ளது போன்றே உம்முடைய மனைவி சாராவையும் நாம் படைத்துள்ளோம். எனவே, நீர் அதை (மனைவியை) நேராக்க விரும்பினால் அது நேராகாது; ஒடிந்து விடும். அப்பெண்ணால்



எது நிகழ்ந்தாலும் நீர் பொறுமையினைக் கடைப்பிடிப்பீராக! மேலும், அப்பெண்ணுக்கும் நல்லமுறையில் உண்ண, உடுத்தக் கொடுப்பீராக! ஆனால், தீனுடைய காரியத்தில் முரண்பட்டு நடந்தால் நீர் பொறுமைக் காட்டாதீர்'' என்று செய்தியறிவித்தான்.

மேலும் நபி (ஸல்) அவர்கள், ''மறுமைநாளில் ஒருவனிடம் முதன்மையாகத் தொழுகையைக் குறித்து வினவப்படும்; பின்னர், தம் மனைவி, அடிமைகளிடத்தில் எவ்வாறு நடந்து கொண்டான் என்பது குறித்தும் வினவப்படும். மனைவி, அடிமைகளிடத்தில் நல்லமுறையில் நடந்திருப்பின், அல்லாஹ்வும் அம்மனிதனிடம் நன்முறையில் நடந்து கொள்வான்'' எனக் கூறினார்கள்.

மேலும், நபி(ஸல்) அவர்கள், ''நீங்கள் உங்கள் மனைவியர்களுக்கு நற்செயல்களைக் கொண்டு அறிவுறுத்துங்கள்; தீனுடைய சட்டதிட்டங்களைக் கற்றுக்கொடுங்கள். அவர்கள் உங்களிடம் சிறை வைக்கப்பட்டவர்கள் போன்றுள்ளார்கள். தங்கள் ஆன்மாவுக்கும் அவர்கள் உரிமையானவர்களில்லை; நீங்கள் அவர்களை உங்களுடைய உரிமைப் பொருளாக (அமானிதமாக) ஏற்றுள்ளீர்கள். அவர்களின் மறைவிடங்களை அல்லாஹ்வின் ஆணையைக் கொண்டு உங்களுக்கு ஆகுமாக்கிக் கொண்டுள்ளீர்கள். எனவே நீங்கள் அவர்களுக்குரிய உணவு உடைகளை அதிகப்படுத்துவீர்களாயின், அல்லாஹ் உங்கள் ரிஸ்கையும், வாழ்நாளையும் அதிகமாக்குவான்; மேலும் நீங்கள் உங்கள் மனைவியர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வீர்களோ, அல்லாஹ்வும் அவ்வாறே உங்களிடம் நடந்து கொள்வான்.''

மேலும் கேளுங்கள்: நபி(ஸல்) அவர்களிடம் தோழர்கள் கேட்டார்கள்: ''அல்லாஹ்வின் தூதரே! எவருடைய ஈமான் நிரப்பமானது?''

அதுபொழுது, நபி (ஸல்) கூறினார்கள்: ''எவன் தன் மனைவி மக்களிடம் நற்குணம், நன்மொழிகளைக் கொண்டு கலந்துரையாடி வாழ்வானோ அவனுடைய இறை நம்பிக் கையே முழுமையானதாகும்.''

மேலும் கூறினார்கள்: ''எவனொருவன் தன்னுடைய மனைவியின் தீயகுணத்தைப் பொறுத்துக் கொள்வானோ, அவனுக்கு ஹலரத் அய்யூப் (அலை) அவர்களுடைய (நோயின் காரணமாக ஏற்பட்ட வேதனையின்) கூலியைக் கொடுக்கப்படு வான்.'

ஆம்! நபி அய்யூப் (அலை) அவர்களின் உடலைப் புழுக்கள் அரித்து உடலெல்லாம் தீயநாற்றமெடுத்து அவர்க ளின் உடலிலிருந்து புழுக்கள் கொட்டும். அவர்கள் அப்புழுக் களை மீண்டும் தம் உடல்மீது எடுத்துப் போட்டுக் கொள்வார் கள். மக்கள் அவர்கள் மீது வீசிய தீயநாற்றத்தின் காரணமாக வெருண்டோடுவார்களாம். இத்துணைத் துன்பங்களையும் நபி அவர்கள் அல்லாஹ்விற்காகப் பொறுத்துக் கொண்டார்கள். அத்துன்பங்களை அவர்கள் அல்லாஹ்விற்காகப் பொறுத்துக் கொண்டதற்காக எத்தகைய நற்கூலியினை அல்லாஹ் நல்கி னானோ அத்தகைய நற்கூலியினைத் தன் மனைவியின் தீய குணத்தைப் பொறுத்துக் கொண்டவனுக்கும் நல்கப்படும்.

இதோ! இன்னொரு நிகழ்ச்சியைக் கேளுங்கள். இஸ்லாத் தின் இரண்டாவது ஆட்சித் தலைவரான உமர் (ரலி) அவர்களி டம் ஒருவர் தம் மனைவியினுடைய தீய குணத்தைக் குறித்து முறையிட வந்தார். அது சமயம் கலீபாவின் வீடு உள்பக்கம் தாழிடப்பட்டிருந்தது; சிறிது நேரம் வெளியில் காத்திருந்தார். உள்ளே கலீபாவின் துணைவியார் உம்மு குல்ஸூம் (ரலி)



அவர்களின் குரல் சற்றுக் கடினமாக ஒலித்தது. அம்மையார் தம் கணவர் உமர் (ரலி) அவர்களிடம் கடின சொற்களால் பேசிக் கொண்டிருந்தார். அக்கடினமான சொற்கள் வீட்டிற்கு வெளியில் நின்றுகொண்டிருந்தவரின் செவிகளில் விழுந்ததும் அவர், ''நாம் நம்முடைய மனைவியின் தீய குணத்தை கலீபாவிடம் கூறி ஏதும் வழிவகை காணலாம் என்று இங்கு வந்தால், கலீபாவின் வீட்டு நிலையும் நம் நிலைப் போன் றன்றோ உள்ளது. சரி திரும்பிப் போய்விடுவோம்'' என்றெண் ணியவராக அவ்விடத்திலிருந்து அகன்றிட எண்ணியபோது, உமர் (ரலி) அவர்கள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்கள். வந்தவர்கள் அம்மனிதரைப் பார்த்து, ''என்ன செய்தி? எங்கு வந்தீர்? ஏன் திரும்பிவிட்டீர்?' என்று வினவி னர். அவர், ''நான் என் மனைவியின் தீய குணங்களைப் பற்றித் தங்களிடம் முறையிட வந்தேன்; இங்கு வந்ததும் தங்கள் துணைவியார் ஏதோ உரக்கப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு, நம் நிலைதான் இவ்வாறென்றால் கலீபாவின் நிலை யும் அவ்வாறேயுள்ளதே என்றெண்ணியவனாகத் திரும்பிச் செல்ல முயன்றேன்'' என்றார்.

அவரின் கூற்றினைக் கேட்ட உமர் (ரலி) அவர்கள், ''நண்பரே! என் மனைவிக்கு நான் செய்ய வேண்டிய கடமை கள் என்மீது நிரம்ப இருக்கின்றன. அதன் காரணமாக அவர் சில பொழுது கடுஞ்சொற்களைக் கூறிடும்போது நான் அவற் றைப் பொறுத்துக் கொள்கின்றேன். என் மனைவி எனக்காகப் பெரிதும் உழைக்கின்றார்; என் சுமைகளைக் குறைக்கின்றார்.

''அவரின் பொருட்டால் நான் ஹராமை விட்டும் விலகியி ருக்கின்றேன். எனக்கு அவர் காவல்காரியாக இருக்கின்றார். அதாவது, நான் வெளியில் போய் விட்டு, மாலை வீடு திரும்பும்வரை என் பொருள்களைக் காத்திடுகின்றார். மேலும்,

என் துணிகளைத் துவைத்திடும் வண்ணாத்தியாகவும் இருக்கின்றார். என்னுடைய பிள்ளைகளுக்கு நாள்தோறும் அன்புடன் பாலூட்டுகின்றார். எனக்கு சமையல்காரியாகவும் இருக்கின்றார். எந்த வேலையைச் செய்வதற்கும் சடைவு கொள்ளாமல் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகின்றார். இவற்றையெல்லாம் எனக்காகச் செய்திடும் என் மனைவி சிலபொழுது எரிச்சலால் எரிந்து விழுவதை நான் தவறாக எடுத்துக் கொள்ளாமல் பொறுமையினைக் கடைப்பிடிக்கின்றேன்'' எனக் கூறினார்கள். கலீபாவின் மொழிகளைக் கேட்ட அம்மனிதர்,

''என் மீதும் என் மனைவிக்குரிய கடமைகள் இவ்வாறே உள்ளது; நானும் என் மனைவியின் தீய குணத்தைப் பொறுத்துக் கொள்வேன்.'' எனக் கூறி விடை பெற்றுச் சென்று விட்டார்.

என்ன கேட்டீர்களா! வீட்டிற்கு வீடு வாசற்படிதான் என்னும் பழமொழிக் கொப்ப நபிமார்கள், வலிமார்கள், நல்லடியார்கள் அனைவருமே ஏதோ ஒரு வகையில் சோதிக்கப் பட்டே வந்துள்ளனர். அல்லாஹ்வும் ''மனைவி மக்களைக் கொடுத்து உங்களைச் சோதிப்போம்!'' எனக் கூறியுள்ளான்.

குணம் நாடி குற்றமும் நாடியன்றோ!

இறுதியாக ஒன்றினைக் கூறி விடை பெறுகின்றோம்:

''இவ்வுலகம் இனிமையானது; செழிப்பானது; மேலும், நிச்சயமாக அல்லாஹ் அதில் (ஆட்சி புரியும்) பிரதிநிதிகளாக உங்களையாக்கி, நீங்கள் எவ்வாறு நடந்துகொள்கின்றீர்கள் எனப் பார்க்கின்றான்; எனவே, உலக விஷயங்களில் அஞ்சிப் பேணி நடப்பீர்களாக! இன்னும் (கெட்ட) மாதருக்கும் அஞ்சிப் பேணி நடப்பீர்களாக! ஏனெனில், இஸ்ரவேலருக்கு முதலாவது சோதனைப் பெண்களிலேயே நடந்தது.''



அறிவிப்பவர்: அபூஸயீதுல் குத்ரீ; முஸ்லிம்.

அல்லாஹ் நம் அனைவர்க்கும் நற்குணத்தை, நல் வாழ்க்கைத் துணைவியை நல்கி, நாயனை நன்றி கூர்ந்திடும் நல்லோர் கூட்டத்தில் சேர்ப்பானாக!

ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!

❋

# கணவனுக்கு மனைவி ஆற்ற வேண்டிய கடமைகள்!

''நான்கு பொருள்கள் அருளப் பெற்றவர் இம்மையிலும் மறுமையிலும் (பெறத் தக்கவைகளில்) சிறந்ததை நிச்சயமாக அருளப் பெற்றவராவார்: 1. நன்றியுள்ள நெஞ்சம்; 2. துதிக்கும் நாவு; 3. ஆபத்துக்களைப் பொறுத்துக் கொள்ளும் உடம்பு; 4. தன் (கற்பு) விஷயத்திலும், (தன் கணவனாகிய) அவன் விஷயத்திலும் அவனை மோசஞ் செய்யாத மனைவி.''

— இப்னு அப்பாஸ்(ரலி); பைஹூ(க்)கி

நபி (ஸல்) அவர்களின் மணிமொழிகளை நாம் பொன்னே போல் போற்றி ஏற்றுச் செயல்பட்டிட வேண்டும். இந்நான்கும் ஒருவனுக்கு கிடைக்கப் பெறுவது அரிதினும் அரிதாகும். அவை அல்லாஹ்வின் அருளின்றி கிடைக்கப் பெறாது என்பதை அறிவோமாக!

மனைவி தன் கணவனுக்கு செய்யவேண்டிய கடமைகள் பல உள. மனைவி தன்னைச் சார்ந்தவர்களை விடவும், தம் பெற்றோர், உற்றார் அனைவரை விடவும், தன்னுடைய கணவனின் அன்பைப் பெற்றிட முயல வேண்டும். வீட்டு அலுவல்களை தாமே பொறுப்பாக கவனித்து செயல்பட வேண்டும். எது ஒன்றைப் பிறருக்கு கொடுப்பதாயிருந்தாலும், வெளியில் புறப்படுவதாகயிருப்பினும், அல்லது நபில் நோன்புகள் நோற்பதாயினும் கணவனின் அனுமதி பெற்றே செய்ய வேண்டும். அவ்வாறின்றி, கணவனின் அனுமதியின்றி வெளியில் புறப்பட்டுச் செல்வது பாவமாகும். இக்காலத்துப் பெண்களில் பலர் தங்கள் அனுமதி பெற்றே எல்லாவற்றையும் தம் கணவர்கள் செய்யவேண்டும் என்ற இழிநிலைக்கு ஆளாகி விட்டனர்.

சில கோழை கணவர்கள் மனைவிகளுக்குக் கூஜா தூக்குவதை இன்பமாகக் கருதி அவ்வாறே செயல்பட்டும் வருகின்றனர். இவ்வாறு கணவர்களை ஆட்டிப் படைப்பவர்கள் பெண்களல்லர்; பேய்களாவர் என்பதை உணர்வோமாக!

ஒரு பெண் தன்னை ஒப்பனை (சிங்காரித்து)ச் செய்து கொண்டு வெளியில் புறப்பட்டுச் செல்வாளாயின், ஷைத்தான் கைத்தட்டி ஆர்ப்பரிக்கின்றான். பிறகு ஆடவர்களுக்கு அவளின் அழகை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். அவளைக் கண்டவர்கள் அனைவரும் அவளை ஜினா செய்த குற்றத்திற்கு ஆளாகின்றனர். அவள்மீது அல்லாஹ்வின் முனிவும், வானவர்கள், நல்லடியார்கள் முனிவும் அவள் தன் இல்லம் வந்து சேரும் வரை இறங்கிக் கொண்டேயிருக்கும்.

ஒரு பெண்ணின் காரணத்தால் தந்தையும், கணவனும் மற்றும் பிள்ளைகளும், உடன் பிறந்தார்களும் அவளுடன்



நரகம் புகுவர் என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. இச் செய்திகள் யாவும் ரத்துல் முக்தார், இர்ஷாதுல் இபாத், துர்ரத்துன்னாஸிஹீன், நுஸ்ஹத்துல் மஜாலிஸ் போன்ற நூற்களில் எழுதப்பட்டுள்ளன.

எனவே, தம் பிள்ளைகளை, குறிப்பாகப் பெண் மக்களை மிகவும் ஒழுக்கத்துடன் வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும்.

இதோ! கேளுங்கள்!

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பின்னர், ஒரு நாள் அவர்களின் உயிரனைய தோழர்கள் குழுமியிருந்தார்கள்; அவர்கள் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் திருக்குர்ஆனுக்கு விரிவுரை எழுதித் தருமாறு கேட்டுக்கொண்டிருந்தனர். அச்சமயம் ஓர் அரபி அங்கு வந்து ஸலாம் சொன்னார். பிறகு அவர்களை விளித்து,

''ரஸுலுல்லாஹ்வின் அன்புத் தோழர்களே! விருந்தாளிகள் சுவர்க்கத்தின் திறவுகோலாவர் என்றும், எவனது வீட்டிற்கு ஒரு விருந்தாளி வருவானோ அவ்வீட்டானுக்காக அல்லாஹ் சுவர்க்கத்தின் ஒரு வாயிலைத் திறந்து விடுகிறானென்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக நீங்கள் கேள்விப்பட்டுள்ளீர்களா?'' என்று வினவினார்.

''ஆம்; நிச்சயமாக இந்த ஹதீஸை நபி (ஸல்) அவர்கள் கூற, நாங்கள் கேட்டுள்ளோம். மேலும், நபி (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்:- ''ஒரு முஃமினாகிய இறையடியானின் இல்லத்திற்கு ஓர் இறையடியானாகிய விருந்தாளி வருவானாயின், அவ்விருந்தாளியுடன் இரு வானவர்களும் வருகின்றார்

கள். விருந்தாளி எடுத்துண்ணும் ஒரு பிடி உணவிற்குப் பகரமாக அவ்வீட்டானுக்கு நூறு நன்மைகளை எழுதி, நூறு தீமைகளை அழித்து விடுகின்றார்கள். இன்னும் நூறு பதவி (தரஜாத்)களை உயர்த்துகின்றார்கள். விருந்தாளி சென்ற பின்னர் நாற்பது நாட்கள் வரையும் அவ்வீட்டான் செய்திடும் (சிறு) பாவங்கள் எழுதப்படுவதில்லை. மேலும், அவ்வீட்டான் அல்லாஹ்வின் கார்மானத்தில் இருப்பான்.'' என நபித்தோழர்கள் கூறினார்கள்.

மீண்டும் அந்த அரபி, ''இந்த ஹதீஸை அலிய்யுப்னு அபூதாலிப் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் வாயிலாக நான் கேள்விப்பட்ட நாள் முதல் விருந்தாளியில்லாமல் ஒரு பிடி உணவைக் கூட இனிமேல் உண்ணமாட்டேன் என்று அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறினேன். ஆனால், இதோ! பள்ளி வாசலின் வாயிற்படியருகே உட்கார்ந்திருக்கும் என் மனைவி, ''நான் எந்த விருந்தாளிக்கும் ஊழியம் செய்ய மாட்டேன்! அவர்களுக்கு உணவு அளிக்க மாட்டேன்; மேலும், எந்த ஏழை எளியோரும் அவர்கள் என் வீடு தேடி வந்தரல் அதை நான் பொறுக்க மாட்டேன்; அவ்வாறு நான் நடப்பதை நீர் விரும்பவில்லையாயின் நீர் என்னை மணவிலக்கு (தலாக்) அளித்துவிடும்'' என்று அவள் கூறிவிட்ட காரணத்தால் உங்களிடம் வந்துள்ளேன்; எனவே நபித்தோழர்களாகிய நீங்கள் எங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்திக் கொடுக்குமாறு வேண்டுகின்றேன் அல்லது எங்கள் இருவரையும் பிரித்து விடுமாறு வேண்டுகின்றேன்'' என முறையிட்டார்.

நபித்தோழர்கள் அவரின் கூற்றைக் கேட்டுச் சிறிது சிந்தனையில் ஆழ்ந்திருந்த பின், அந்த அரபியை விளித்து அபூபக்கர்



(ரலி), ''ஓ அரபியே! நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:-''எந்தப் பெண் தன் கணவனிடம் என்னைத் தலாக் சொல்லிவிடு என்று அவள் கேட்க, அதனை அவளின் கணவன் ஏற்காது போய் விடுவானாயின் மறுமை நாளில் அவளின் முகம் தசையின்றி எலும்பு மட்டும் இருக்கும். இன்னும் அல்லாஹுதஆலா அவளின் நாவைப் பிடரியிலிருந்து வெளிப்படுத்தி, நரக நெருப்பில் எறிவான்; அப்பெண் பகலெல்லாம் நோன்பு வைத்து, இரவெல்லாம் நின்று வணங்கியவளாயிருப்பினும் சரியே!'' என்று கூறினார்கள்.

ஹலரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''நீ அவளிடம் கூறு! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''ஒருத்தித் தன் கணவனை விடுத்து ஓர் இரவு தனித்து இருப்பாளாயின், நரகத்தில் கீழ்த்தட்டில் காரூன், ஹாமானுடன் இருப்பாள். அவள் பத்தினியாகவும், பெரும் வணக்க வாளியாகவும் இருந்திட்டபோதினும் சரியே!''

ஹலரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ''ஓ அரபியே! உன் மனைவிக்குக் கூறிவிடு! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எவளொருத்தித் தன்னுடைய கணவனின் அனுமதியின்றி வீட்டை விட்டும் புறப்படுவாளாயின், எந்தெந்த பொருள்களின் மீது பொழுது புலருமோ அவையனைத்தும், மேலும், கடல் வாழ் மீனினங்களும் அவளின் மீது முனிவு (லஃனத்) செய்கின்றன.

ஹலரத் அலிய்யுப்னு அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''நீ அவளிடம் கூறுக! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''ஒரு பெண் தனது ஒரு மார்பைப் பொறியல் செய்தும், இன்னொன்றைச் சமைத்தும் கணவனின் முன்னால் வைத்திடி

னும் அவளின் மீது கணவன் அன்பு பாராட்டாத நிலையில் பொருத்தமற்றிருப்பானாயின், மறுமையில் யூத, கிறிஸ்துவர்களுடன் இருப்பாள்.''

ஹல்ரத் இப்னு அப்பாஸ் (ரல) அவர்கள், ''ஓ அரபியே! உன் மனைவியிடம் கூறு! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''எவளொருத்தி இம்ரானுடைய மகள் மரியம் (அலை) அவர்களைப் போல் அல்லாஹ்வை வணங்கி வழிபடக் கூடியவளாயிருந்திடினும் சரியே; அவளின் கணவன் அவளைப் படுக்கையறைக்கு (உடலுறவுக்கு) அழைத்திடும்போது ஒரு மணி நேரம் தாமதித்து வருவாளாயின் மறுமையில் அவள் அநியாயக்காரர்களுடன் நரகத்தின் கீழ்த்தட்டில் இருப்பாள்; அவள் முகம் குப்புறக் கவிழ்ந்தவளாக இழுக்கப்படுவாள்.''

ஹல்ரத் மஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''ஓ அரபியே! நீ உன் மனைவியிடம் சொல்! நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

''கணவனின் மூக்கில் சீழும், வாயில் இரத்தமும் வடிந்திடும் நிலையில் மனைவி அவற்றை தன் நாவினால் நக்கித் தூய்மைச் செய்திட்ட போதிலும், அவளைக் கணவன் விரும்பாத நிலையில் அவள் இருப்பாளாயின், மறுமை நாளில் நெருப்பால் ஆன ஆணிகள் அறையப்பட்டவளாகவும், நெருப்பால் ஆன பெட்டியில் வைக்கப்பட்டு, நரக நெருப்பில் வீழ்த்தப்படுவாள்.''

ஹலரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள், ''ஓ அரபியே! நீ உன் மனைவிக்குச் சொல்லிவிடு! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

''ஒரு பெண் ஹலரத் சுலைமானுப்னு தாவூத் (அலை) அவர்களைப் போன்று செல்வக்குவியல்களைப் பெற்றிருந்து அவளின் கணவன் அச்செல்வங்கள் அனைத்தையும் அழித்து விட்டபோதிலும், ''என் செல்வம் அனைத்தையும் அழித்து விட்டானே'' எனக் கூறுவாளாயின், அவளின் நாற்பதாண்டைய நற்செயல்களும் அழிக்கப்பட்டுவிடும்.''



ஹலரத் அபூZதர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:- ''ஓ அரபியே! நீ உன் மனைவிக்குக் கூறிவிடு! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

'ஒரு பெண் விண்ணுடையார், மண்ணுடையார் போல் (மலக்குகள், மனிதர்கள் போல்) வணக்க வழிபாடுகளை நிகழ்த்திடினும், தன் கணவனின் மனம் சிறிதளவிற்கு வேதனைக்கு ஆளாயின் மறுமையில் அவளது இரு கைகளும் கழுத்துடன் கட்டப்பட்டவளாகவும், இரு கால்கள் சங்கிலியினால் கட்டப்பட்ட நிலையிலும், மறைவிடம் (வெட்கஸ்தலம்) திறக்கப்பட்டவளாகவும், அருவருப்புடன் வருவாள்; இரக்கமற்ற (ஜபானிய்யாக்கள்) வர்களான நரகத்தின் வானவர்கள் அவள் மீது சாட்டப்பட்டு, அவர்கள் அவளைச் சிறிதும் குறையாமல் வேதனைச் செய்வார்கள்.''

ஹலரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள், ''ஓ அரபியே! நீ உன் மனைவிக்குச் சொல்! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- அல்லாஹ்விற்கன்றி வேறு எவருக்கும் சஜ்தா செய்வது ஆகும் எனக் கூறுவேனாயின், மனைவி தன் கணவனுக்கு சஜ்தா செய்யுமாறு ஏவியிருப்பேன்.''

ஹலரத் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள் கூறினார்கள்:- ''ஓ அரபியே! நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''நபி அய்யூப் (அலை) அவர்கள் நோயுற்றது போன்று தன் கணவன் ஏழாண்டுகள், ஏழு மாதங்கள், ஏழு நாட்கள் நோயில் வீழ்ந்திட்ட நிலையில், மனைவி கணவனுக்குப் பணிவிடைச்

செய்வதில் ஒரு மணி நேரம் மனம் சடைவடைந்து ''நான் உனக்குப் பணிவிடைச் செய்யமாட்டேன்'' எனக் கூறுவாளா யின், மறுமையில் சூனியக்காரன், குறிகாரன், போன்றவர்கள் நரகில் கிடக்கையில் அவர்களுக்கும் கீழ்ப் பகுதியில் இருப் பாள்.''

ஹலரத் ஸயீத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:- நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:-

''எவளொருத்தித் தன் கணவன் கொடுக்கின்ற குறைவான நஃபகா, கிஸ்வத் - அதாவது உணவு, உடை முதலியவற்றைப் பொருந்திக் கொள்ளாமல் குறைப்பட்டுக் கொள்வாளாயின், அல்லாஹ் அவளைப் பொருந்திக் கொள்ள மாட்டான்; அவள் பத்தினியாகவும், ஸாலிஹானவளாயுமிருந்திடினும் சரியே! நீ இதனை உனது மனைவிக்குச் சொல்லிவிடு.''

ஹலரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்:- ''ஒ அரபியே! நீ உனது மனைவிக்குச் சொல்லி விடு! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''மனைவி தன் கணவனின் பொருளில் திருட்டும், மோச டியும் செய்வாளாயின், அவளின் மீது வானவர்களில் எழுபதி னாயிரம் மலக்குகள் முனிவு என்னும் 'லஃனத்' செய்கின்றார் கள்.

ஹலரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறினார்கள், ''நீ அவளுக்குக் கூறிவிடு, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''எந்தப் பெண்ணாவது தனது கணவரின் விருந்தாளியை மகிழ்விக்காமல், அவர்களுக்குப் பணிவிடைச் செய்யாமல்



இருப்பாளாயின், அவள் மீது வானவர்கள் அனைவரும், படைப்புகள் யாவும் லஃனத்துச் செய்கின்றனர்.''

ஹலரத் ஹஸ்ஸானுப்னு ஸாபித் (ரலி) அவர்கள் கூறினார் கள்: நீ அவளிடம் கூறு: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''கணவன் மனைவியின் மீது சினம் கொண்டால், அல் லாஹ்வும் அவளின் மீது சினமுறுவான்; அவன் அவள் மீது மகிழ்வு கொண்டால், அல்லாஹ்வும் மகிழ்வு கொள்வாள்; அவள் குவைலிதுடைய மகள் கதீஜாவாயிருப்பினும் சரியே!''

ஹலரத் கதாதா (ரலி) அவர்கள் கூறினார்கள்:- ''நீ உன் மனைவியிடம் கூறிவிடு! நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''மனைவி, தன் கணவனுக்குச் சினமூட்டுகின்ற பேச்சினைப் பேசி, அவனுக்குச் சினமூட்டுவாளாயின், அவளின் பெயரை நயவஞ்சகர்களின் பட்டோலையிலும், இணை வைத்திடும் முஷ்ரிகீன்களின் கூட்டத்தவரிலும் எழுதப்படும்; அவள் தனது இருப்பிடத்தை நரகில் எதுவரையும் காணாளோ அது வரையி லும் உலகத்தை விட்டும் பிரியமாட்டாள்.''

ஹலரத் ஹஸனுப்னு அலிய்யுன் (ரலி) அவர்கள் கூறினார் கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

''அல்லாஹு தஆலா கூறுகின்றான்: ''என்னுடைய வான வர்களே! ஒரு பெண் தன் கணவன் கோபப்படத்தக்கச் சொற்க ளைக் கூறி, அதனால் அவன் சினம் கொள்வானாயின், நிச்சய மாக நான் அவளை வெறுக்கிறேன்; இன்னும் மறுமையில் நான் அவளை அருள் பார்வையால், நோக்கமாட்டேன்.''

ஹலரத் ஸயீதுப்னுல் முஸய்யிப் (ரலி) அவர்கள் கூறினார் கள்:- ''நீ உன் மனைவியிடம் சொல்! நபி (ஸல்) அவர்கள்

கூறினார்கள்: ''நிச்சயமாகப் பெண்களுக்கு அல்லாஹு தஆலா சுவனத்தை ஹராமாக்குகின்றான். ஒரு போதும் அவர்கள் சுவனத்தில் நுழைய மாட்டார்கள்; எனினும், சிலரைத் தவிர! எந்தச் சிலர் என்றால், எவர்களின் மீது அல்லாஹ்வும், அப் பெண்களின் கணவர்களும் மகிழ்ச்சியுடன் பொருந்திக் கொள் கின்றனரோ அச்சிலப் பெண்களைத் தவிர!''

ஆக, இவ்வாறான நபிமொழிகளைக் கேட்டுக் கொண்டி ருந்த அந்த அரபியின் மனைவி, ரஸூலுல்லாஹ்வின் தோழர் களே! என் கணவரிடம் சொல்லுங்கள்: நிச்சயமாக என்னு டைய தீயகுணத்தின் காரணமாக நான் வெட்கப்படுகின்றேன்; இனிமேல் நான் தீயகுணத்துடன் நடக்கமாட்டேன்; அவரின் கட்டளைப்படி ஒழுகி பணிவிடைகள் செய்து, அவரின் அடிய வளாகவும் அவருக்கு வழிபடக்கூடியவளாகவும் இருப்பேன்; சிறிதும் அவரின் சொல்லை தட்டமாட்டேன்; மனவருத்தம் செய்யேன்; நான் உயிர்வாழும் காலமெல்லாம் ஒரு போதும் அவரைச் சினந்து கொள்ளவோ, வெறுப்பு கொள்ளவோ மாட்டேன்.'' என்றாள்.

அதுபொழுது அதே அரபி, ''நான் இப்பொழுது இவ ளைப் பொருந்திக் கொண்டேன்'' என்றார்.

என்ன! நீண்ட இந்த நபி மொழிகள் மூலம் நாம் எதை அறிந்து கொண்டோம்? நபி (ஸல்) அவர்கள் நமக்குச் சாதகமா கவே தான் இவற்றைக் கூறியுள்ளார்கள் என்று எண்ணிக் கொண்டீர்களா? அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொள்ளுங்கள். மனைவியைத் தக்கக் காரணமின்றி, நம் விருப்பத்திற்கு எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம்; முறையின்றி, நியாயமின்றி கண்டிக்கலாம்; தண்டிக்கலாம் என்றெல்லாம் தவறாகக் கணக்



குப் போட்டுவிடாதீர்கள்; அத்தகைய உங்கள் எண்ணம் மிகத் தவறானதாகும். பெண்களும் நம்மைப் போன்று மனித இனத்த வர்கள் தாம் என்பதை உணர்வோமாக! பெண்களில் பேய்க ளும் உள்ளனர்; அப்பேய்கள் எந்த வேப்பிலைக்கும் அடங் காது. அவைகள் நமக்குரிய சோதனைகள் என்றெண்ணிப் பொறுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. சில பிறவிகளைத் திருத்தவே முடியாது. அது தலையெழுத்தென் றெண்ணி இருக்க வேண்டியதுதான்; இல்லையாயின் பிரிக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

இன்றைக்கு நம்மவர்களில் பலர் தங்கள் மனைவியர்களை அவர்களின் விருப்பத்திற்கு எங்கு வேண்டுமானாலும் சுற்றித் திரிந்திட அனுமதி கொடுத்துவிடுகின்றனர். அவர்கள் தர்காஹ், சினிமா, கண்காட்சி, சர்க்கஸ் என்றெல்லாம் அவர்கள் விருப் பத்திற்குத் திரிந்து கொண்டிருக்கின்றார்கள். சில இழி பிறவி கள் அவர்களே மனைவியரைச் சிறிதும் கூச்சநாச்சமின்றி, வெட்கமானமின்றி, பல ஆடவர்களிடம் பழகுவதற்கும், பல ஹராமான இடங்களுக்கும் அழைத்துச் சென்றும் 'ஹயா' என்னும் வெட்க உணர்ச்சியை அவர்களிடம் இல்லாமல் செய்துவிட்டு, பின்னர், அவர்கள் கெட்டுக் குட்டிச் சுவராக ஆன பின்னர் அப்பெண்களைத் திருத்தவும் அடக்கி ஆளவும் முற்படும்போது, அப்பெண்கள் வளைவதுமில்லை; அடங்கிப் போவதுமில்லை; அதன் காரணமாக இருவருக்குமிடையே மனக்கசப்புகளும், பிணக்குகளும் ஏற்பட்டு அது மணவிலக் கில் கொண்டு போய் விட்டுவிடுகின்றது.

இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் பெற்றோரி டம் உள்ள குறைபாடேயாகும். அவர்கள் தம் பிள்ளைகளுக்கு நல்ல மனப் பயிற்சியும், மார்க்க ஒழுக்கமும் ஊட்டி வளர்க்கா

மல் அதிக செல்லம் கொடுத்து வளர்த்து விடுவதுதான் இதற் கெல்லாம் காரணம்.

மேலும், இன்றைய இளைஞர்கள் தம் மனைவியர்களை பல வகையிலும் வழிகெடுத்து வைத்து விட்டனர். பெண்கள் மணம் (அத்தர், சென்ட்) பூசுவது, உதட்டிற்குச் சாயம் பூசுவது போன்ற தீய செயல்களையெல்லாம் மார்க்கம் தடைச் செய்து வைத்திருக்க இவர்கள் தம் மனைவியர் மேல் நாட்டு மணப் பொருள்களைப் பூசிக் கொண்டு குச்சிக்காரிகளாம் சினிமாக்கா ரிகளையும் விட மிகக் கேவலமான முறையில் மெல்லிய ஆடைகளை அணிந்து, அலங்காரமும், ஒப்பனைகளும் செய்து கொண்டு கடைவீதிகளிலும், கடற்கரைகளிலும் உலா வரச் செய்து விட்டனர்.

நம் இனப் பெண்மணிகளைப் பிற சமுதாயத்தவர்கள் மிகவும் இழிவாகப் பேசிடவும், நோக்கிடவும் வழி வகைச் செய்து விட்டனர். இந்த அறியாமையில் உழன்றிடும் நம் இளைஞர்கள், தம் மனைவியர் இவ்வாறெல்லாம் இழிந்த நிலையில் இருப்பதையே நாகரீகம் என நம் இளைஞர்கள் எண்ணுகின்றனர். இதையெல்லாம் இழிவென எண்ணுவ தில்லை.

இஸ்லாத்தின் மானம் மரியாதைகள் யாவும் இவர்களால் பறிக்கப்படுவதைக் கண்ணுறும் நல்ல நெஞ்சங்கள் வேதனை யால் விம்மி, குருதிக் கண்ணீர் சிந்துகின்றன.

எனவே, அன்பர்களே! உங்களிடம் அல்லாஹ்வால் ஒப்ப டைக்கப்பட்டுள்ள அடைக்கலப் பொருள்களாகிய உங்கள் மனைவிகளைக் குறித்து நாளை மறுமையில் கேள்வி கேட்கப் படுவீர்கள்!

எனவே பெண்களை அவர்களின் விருப்பத்திற்கெல்லாம் திரிய அனுமதிக்காமல் அல்லாஹ்வின் வெறுப்பிற்கும் நாம்



ஆளாகாமல் ஒரு கட்டுப்பாட்டுடன் அவர்களை வைத்திருக்க முயலுவோமாக!

அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்லொழுக்கமுள்ள மனைவிகளைத் தந்து அவர்களின் மூலம் இவ்வுலக மறுவுலக வாழ்க்கையில் நற்பேற்றினை அளித்தருள்வானாக!

நம்மனைவியரையும் இனிய ஷரீஅத்தைப் பேணி நடப்ப தற்கு நல்லுதவி செய்வானாக!

ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!

வ ஆகிரு தஃவானா அனில் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்!